

புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

Vol.5: Issue.3, July 2025

ISSN : 2583-0139

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Vol.5: Issue – 3, July– 2025

ISSN:2583-0139

புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

Editor-in-Chief

Dr S.Thangamani

இணைப் பதிப்பாசிரியர்

முனைவர் ரா.பிரேம் குமார்

Associate –Editor

Dr R.Prem Kumar

ஆசிரியர் குழு

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் ஆ.முத்தையன்

முனைவர் ச.கோபிநாத்

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் இரா.கோகுல்

நிறுவனர்

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

3/199 ஆ.கூடலூர், ஆய்ந்தூர் (அஞ்சல்)

கண்டாச்சிபுரம், விழுப்புரம் - 605755

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2025 • All Rights Reserved •

Index

S.No	Title & Author	Pages
1	The Role of Missionaries in Tamil Grammatical Reconstruction /இலக்கண மீளுருவாக்கத்தில் மிஷனரிமார்களின் பங்கு **Jayapal. P / ஜெயபால். ப**	01
2	The Word Anangu in Agananooru / அகநானூற்றில் அணங்கு என்னும் சொல்லாடல் **Keerthana.A, Sangeetha.P / கீர்த்தனா. அ, சங்கீதா. ப**	11
3	Challenges faced by the visually impaired in acknowledging poetry (Based on Gnana Koothan's "Balajikku hareram" poem) / கவிதையை அறிதலில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சவால்கள் [ஞானக்கூத்தனின் பாலாஜிக்கு ஹரேராம் என்ற கவிதையை முன்வைத்து] **Mahalingam.M, DR.L.Ramraj.L / மகாலிங்கம்.மு, ராம்ராஜ். லி**	18
4	Samana Buddha Maruppil Thevara Movarin Uththigal / சமண பௌத்த மறுப்பில் தேவார மூவரின் உத்திகள் **Shanthy Mahalingasivam, Gokul.R / சாந்தி மகாலிங்கசிவம், கோகுல். இரா**	36
5	Kiṟittuva vētākamattil pāṭuporuḷkaḷ / கிறித்துவ வேதாகமத்தில் பாடுபொருள்கள் **Vijayaprabha.P / விஜயபிரபா.பா**	45
6	Deconstructing the Mythology and Cultural Dynamics of Mariamman in Pudukkottai Region / புதுக்கோட்டை வட்டார மாரியம்மன் வரலாற்றில் தொன்மமும் பண்பாட்டு மோதல்களும் **Vinotha.S, Jayapal.P / வினோதா.செ, ஜெயபால்.ப**	54

இலக்கண மீளுருவாக்கத்தில் மிஷனரிமார்களின் பங்கு

The Role of Missionaries in Tamil Grammatical Reconstruction

ஜெயபால். ப, தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641006.

Jayapal. P, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641006.

ORCID: https://orcid.org/ 0009–0009–9945–0784

DOI: 10.5281/zenodo.16400498

Abstract

The concept of language and nation which originated in European thought in the eighteenth century brought world languages into the grammatical generality. The project was designed to identify the relationship of the language. This work was an attempt to identify linguistic relationship between the language contributed to European globalization and grammatical proliferation. The fundamental data for this had been received from the Christian priests who travelled throughout the world and learned languages from grammar books and the dictionary. The project never had any problem in confronting the Indian tradition. Because the project was a grammar-dictionary was popularized by clergies and administrators before reaching India in 17 AD. The grammar dictionaries were originated by European priests starting from the 17th century AD. We have received the complete grammar of Christian missionaries by the 18th century. These grammar books make some innovative changes in the grammar. The data obtained from the study of the grammatical texts of Ziegenbalg, Beschi and Rhenius on which this is based, suggest that the missionaries who came to Tamil Nadu had a grammatical approach of Tamil. They also present some theoretical ideas for the modernization of Tamil Grammar. Based on this, this research article will identify some theoretical ideas.

ஆய்வுச்சுருக்கம்

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனையில் தோற்றம் பெற்ற மொழியும் தேசமும் பற்றிய கருத்தாக்கம் உலக மொழிகளை இலக்கணப் பொதுமைக்குள் இட்டுச்சென்றது. மொழியின் குடிவழி உறவினை அடையாளம் காண்பதற்கு இத்திட்டம் ஏதுவாக அமைந்திருந்தது. மொழிக்களுக்கிடையிலான குடிவழி உறவினை அறியும் முயற்சி ஐரோப்பியரின் உலகப் பரவலுக்கும் இலக்கண நூற்பெருக்கத்திற்கும்

வித்திட்டது. இதற்கான அடிப்படைத் தரவுகள் கிறித்துவ பாதிரிமார்கள் உலகம் முழுதும் சென்று அந்நாட்டு மொழிகளைக் கற்று அதன் வழிப் பெறப்பட்ட இலக்கண நூல்களிலிருந்தும், அகராதிகளிலிருந்தும் கிடைத்தன. இத்திட்டம் இந்திய மரபை எதிர்கொள்வதில் சிக்கல் ஏதும் இருந்திருக்கவில்லை. ஏனெனில் இத்திட்டம் இந்தியாவை அடைவதற்கு முன்பாக மேனாட்டுக் கிறித்துவ பாதிரிமார்களாலும், நிர்வாகிகளாலும் இலக்கண-அகராதி பெருக்கம் உருப்பெற்றிருந்தன. தமிழ் மரபைப் பொறுத்தமட்டில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டுத் தொடங்கி ஐரோப்பிய பாதிரிமார்களால் இலக்கண-அகராதி நூல்கள் தோற்றம் பெற்றிருந்தன. கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே கிறித்துவ பாதிரிமார்கள் எழுதிய முழுமை இலக்கணங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இந்த இலக்கண நூல்களே மொழியில், இலக்கண நிலையில் சில புதுமை மாற்றங்களைக் கொண்டு வந்தன. இதற்கு அடிப்படையாக அமைந்திருந்த சீகன்பால்கு, பெஸ்கி, இரேனியஸ் ஆகியோரின் இலக்கண நூல்களை ஆராய்ந்ததில் கிடைத்த தரவுகள் தமிழகம் வந்த மிஷனரிமார்களுக்கு தமிழ் மொழிக்குறித்த இலக்கணப்பார்வை எவ்வாறு இருந்தது என்பதையும் உணர்த்துகின்றன. மேலும் தமிழ் இலக்கணங்களை தற்கால நிலையில் மீளுருவாக்கம் செய்வதற்கு சில கோட்பாட்டுச் சிந்தனைகளை இந்த இலக்கண நூல்கள் முன்வைக்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு சில கோட்பாட்டு சிந்தனைகளை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

Keywords: European Missionaries, Tamil Grammar,17th and 18t Century,Ziegenbalg,Beschi,Rhenius,Theoretical Thoughts, Modernization, Europeans Tamil Research, Europeans Tamil Language Contribution, ஐரோப்பிய மிஷனரிமார்கள் - தமிழ் இலக்கணம் - 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டு – சீகன்பால்கு – பெஸ்கி – இரேணியஸ் - கோட்பாட்டுச் சிந்தனை – நவீனத்துவம் - ஐரோப்பியரின் தமிழாய்வுகள் - ஐரோப்பியரின் இலக்கண கொடை.

முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பிய சிந்தனையில் தோற்றம் பெற்ற மொழியும் தேசமும் பற்றிய கருத்தாக்கம் உலக மொழிகளை இலக்கணப் பொதுமைக்குள் இட்டுச்சென்றது. மொழியின் குடிவழி உறவினை அடையாளம் காண்பதற்கு இத்திட்டம் ஏதுவாக அமைந்திருந்தது. மொழிக்களுக்கிடையிலான குடிவழி உறவினை அறியும் முயற்சி ஐரோப்பியரின் உலகப் பரவலுக்கும் இலக்கண நூற்பெருக்கத்திற்கும் வித்திட்டது. "பதினெட்டாம் நூற்றாண்டு ஐரோப்பியச் சிந்தனையில் மொழிகளும் தேசங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக, இணையானவையாகப் புரிந்து கொள்ளப்பட்டன. அதாவது அவற்றின் வரலாறுகள் குடிவழி (Genealogical) உறவுகளால் வரையறுக்கப்பட்டன என்று கருதப்பட்டன" (ப.41, திராவிடச் சான்று, தாமஸ் டிரவுட்மன்). இதற்கான அடிப்படைத் தரவுகள் கிறித்துவ பாதிரிமார்கள் உலகம்

முழுதும் சென்று அந்நாட்டு மொழிகளைக் கற்று அதன் வழிப் பெறப்பட்ட இலக்கண நூல்களிலிருந்தும், அகராதிகளிலிருந்தும் கிடைத்தன. இத்திட்டம் இந்திய மரபை எதிர்கொள்வதில் சிக்கல் ஏதும் இருந்திருக்கவில்லை. ஏனெனில் இத்திட்டம் இந்தியாவை அடைவதற்கு முன்பாக மேனாட்டுக் கிறித்துவ பாதிரிமார்களாலும், நிர்வாகிகளாலும் இலக்கண-அகராதி பெருக்கம் உருப்பெற்றிருந்தன. தமிழ் மரபைப் பொறுத்தமட்டில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டுத் தொடங்கி ஐரோப்பிய பாதிரிமார்களால் இலக்கண-அகராதி நூல்கள் தோற்றம் பெற்றிருந்தன. கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே கிறித்துவ பாதிரிமார்கள் எழுதிய முழுமை இலக்கணங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இந்த இலக்கண நூல்களே மொழியில், இலக்கண நிலையில் சில புதுமை மாற்றங்களைக் கொண்டு வந்தன.(ப.77, திராவிடச் சான்று, தாமஸ் டிரவுட்மன்). இதற்கு அடிப்படையாக அமைந்திருந்த சீகன்பால்கு, பெஸ்கி, இரேனியஸ் ஆகியோரின் இலக்கண நூல்களை ஆராய்ந்ததில் கிடைத்த தரவுகள் தமிழகம் வந்த மிஷனரிமார்களுக்கு தமிழ் மொழிக்குறித்த இலக்கணப்பார்வை எவ்வாறு இருந்தது என்பதையும் உணர்த்துகின்றன. மேலும் தமிழ் இலக்கணங்களை தற்கால நிலையில் மீளுருவாக்கம் செய்வதற்கு சில கோட்பாட்டுச் சிந்தனைகளை இந்த இலக்கண நூல்கள் முன்வைக்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு சில கோட்பாட்டு சிந்தனைகளை அடையாளப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

இலக்கண மரபு

கிரேக்க இலக்கண மரபே தொன்மை இலக்கண மரபாக உள்ளது. கிரேக்க இலக்கண மரபோடு எந்த வகையிலும் தொடர்பில்லாத இந்திய இலக்கண மரபு தனக்கென தனித்துவமான ஒரு மரபைக் கொண்டுள்ளது. இந்திய மரபின் முதன்மை இலக்கணமாகக் (கிடைத்த அளவிலே) கருதப்படுவது பாணினி இலக்கணம். பாணினி தனக்கென ஓர் இலக்கண மரபைக் கொண்டிருக்க இம்மரபைச் சாராத இலக்கண நூல்களும் காணப்பட்டன. இந்நூல்கள் ஐந்திரம் எனும் இலக்கணக் கோட்பாட்டைக் கொண்டு விளங்கின. இந்தக் கோட்பாட்டு நீட்சியைப் பிரதிபலிப்பதாகவே தமிழின் தொல் இலக்கணமான தொல்காப்பியம் உள்ளது. (ப.89-90, திராவிடச் சான்று, தாமஸ் டிரவுட்மன்). தமிழ் மரபிலக்கணம் இந்தக் கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டாலும் தமிழ் மொழிக்கெனத் தனித்த மரபைக் கொண்டுள்ளது. எழுத்து, சொல், பொருள் எனும் சிந்தனை வழித் தொல்காப்பியம் ஐந்திர மரபைக் கொண்டுள்ளது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுந்த வீரசோழியம் ஐந்திலக்கணத்தையும் தனித்தனியே விளக்கும் விதமாக ஒரு முழுமையான ஐந்திலக்கண நூலாக உருப்பெற்றது. தொல்காப்பியத்தை மூலநூலாகக் கொண்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுந்த நன்னூல் தொல்காப்பியத்திலிருந்து மாறுபட்ட ஓர் அமைப்பைக் கொண்டு எழுத்து, சொல் இரண்டின் இலக்கணங்களை மட்டும் பேசுகின்றது. (ப.142, ஐரோப்பிய மொழிகளில்

தமிழ் இலக்கண நூல்கள் (கட்டுரை), புத்தகம் பேசுது, தமிழ்ப் புத்தக உலகம், 1800 -2009, ஆசெர், ஆர்.இ., (தமிழில்:ஆர். பெரியசாமி).

இலக்கணப் பொதுமை

தொல்காப்பியர் காலந்தொட்டு ஒரு நீண்ட இலக்கண வரலாற்றைத் தமிழ் இலக்கண மரபு கொண்டுள்ளது. ஐந்திலக்கணம், இருவகை இலக்கணம், தனித்தனியேயான இலக்கணங்கள் பேசும் நூல்கள் என்று பலவாறாகப் பெருகியுள்ளன. மொழியாய்வு அல்லது மொழியைக் கற்றல் நிலையில் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் அடிப்படையாக அமைகின்றன. ஏனைய இலக்கணங்கள் இலக்கியம் சார்ந்து அமைகின்றன. தொல்காப்பியம், நன்னூல் ஆகிய அடிப்படை நூல்களே பிற்கால இலக்கணநூல்களின் வளர்ச்சியைத் தீர்மானித்துள்ளன. எழுத்தியல் துறையிலும், சொல்லியல் நிலையிலும் தொல்காப்பியர் மற்றும் நன்னூலாரிடையே மாறுபட்ட பார்வை இருந்துள்ளதைக் காணலாம். எழுத்திலக்கணம் நெடுங்கணக்கு, பிறப்பியல், புணர்ச்சி எனும் பகுப்பினுள்ளும், சொல்லிலக்கணம் பெயர், வினை, இடை, உரி எனும் நான்கு பகுப்பினுள்ளும் அடக்கப்பட்டாலும் அதனைக் கட்டமைக்கும் விதத்தில் மாறுபாடுகளைக் கொண்டுள்ளன. தொல்காப்பியம் தோற்றம் பெற்றுப் பல நூற்றாண்டிற்குப் பிறகே நன்னூல் உருவாக்கம் பெற்றுள்ளது. ஆக, காலச்சூழல் அடிப்படையில் சில மாறுபாடுகளைக் கண்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது. இதுபோன்ற ஒரு மாற்றத்தையே ஐரோப்பியரால் உருவாக்கம் பெற்ற இலக்கண நூல்கள் சந்தித்துள்ளன.

மதப்பரப்பல் நோக்கில் தமிழகம் வந்த பாதிரிமார்களுக்கு மொழியை எதிர்கொள்வதில் அடைந்த சிக்கல்கள் இலக்கண நூல்களின் தேவையை உணர்த்தின. மதப்பரப்பலில் முக்கியக் கருவி மொழியே எனும் சூழலில் கிறித்துப் பாதிரிமார்களால் தமிழ் இலக்கண நூல்கள் உருவாக்கம் பெற்றன. உலக இலக்கணங்களிடையிலான இலக்கணப் பொதுமையே தமிழ் இலக்கணகங்களை இலத்தீன் அல்லது ஆங்கில மொழியில் படைக்க ஏதுவாக அமைந்தது. (ப.66, இலக்கணவியல் மீக்கோட்பாடும் கோட்பாடுகளும், சு.இராசாராம்).

இலக்கணக் கட்டமைப்பு

தமிழ் மரபிலக்கணம் கொண்டிருந்த ஒழுங்கமைப்பு முறையிலிருந்து இந்த இலக்கணங்கள் மாறுபட்ட அமைப்பைக் கொண்டுள்ளன. தொல்காப்பியம் எழுத்திலக்கணத்தை நூல்மரபு, மொழிமரபு இவற்றைக் கூறிவிட்டு எழுத்து, புணர்ச்சி பற்றி விளக்குகின்றது. நன்னூலானது நூலினது வரலாறு முதலியவற்றைப் பாயிரப் பகுதியில் குறிப்பிட்டு எழுத்ததிகாரத்தில் எழுத்தையும், புணர்ச்சியையும் விளக்குகின்றது. தமிழ் மரபிலக்கணம் நெடுங்கணக்கை முதல், சார்பு என்று

பிரித்துக்கொண்டு முதலெழுத்துகளின் பிறப்பியல் கோட்பாட்டை விளக்கியுள்ளது. சார்பெழுத்தை வகுத்துக் கொள்வதில் தொல்காப்பியர், நன்னூலாருக்குமிடையே மாறுபாடு இருந்துள்ளது. எழுத்துகளின் வகைப்பாட்டினைத் தொடர்ந்து புணர்ச்சி இலக்கணம் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. எழுத்தியலுக்கும் புணரியலுக்கும் இடையே பதவியல் எனும் சொற்பாகுபாட்டை விளக்கும் இயலை நன்னூலார் வைத்துள்ளார். இது தொல்காப்பியத்திலிருந்து மாறுபட்ட ஒரு புதுமையான அமைப்பு. சொற்களுக்கிடையிலான புணர்ச்சியைப் பேசும் மரபிலக்கணங்கள் எழுத்து மற்றும் புணர்ச்சியைப் பற்றி பேசியிருக்கவில்லை. அப்படியே ஆரம்பகால ஐரோப்பியர்கள் எழுதிய தமிழ் இலக்கண நூல்களை எடுத்துக்கொண்டோமானால் எழுத்திலக்கணத்தை எழுத்து, உச்சரிப்பு, புணர்ச்சி எனும் நிலையில் விளக்கியுள்ளனர். தமிழ் நெடுங்கணக்கை அறிமுகப்படுத்தல், உச்சரிப்பு மாற்றத்தினை விளக்குதல், புணர்ச்சியின் அடிப்படை விதிகளை விளக்குதல் ஆகிய மூன்று நிலைகளில் எழுத்திலக்கணத்தை அடக்குகின்றனர். நெடுங்கணக்கு பற்றிய பகுப்போ, பிறப்பியல் கோட்பாடோ இவர்கள் இலக்ணங்களில் அமைத்துக் கொள்ளப்படவில்லை. மொழியைக் கற்பித்தல் நிலையில் பிழையற கற்றல், பிழையின்றி உச்சரித்தல் எனும் நோக்கிலேயே எழுத்திலக்கணம் பற்றி பார்வை அவர்களுக்கு இருந்துள்ளது. (ப.129, தமிழ் மொழி இலக்கண இயல்புகள், அ. சண்முகதாஸ்).

சொல்லதிகாரத்தைப் பகுத்துக் கொள்வதிலும் தொல்காப்பியர், நன்னூலாருக்கான அணுகுமுறை மாறுபட்டு இருந்துள்ளது. எழத்துகள் சொல்நிலையில் பொருள் தருவது தொடங்கி அதன் பகுப்புகளைத் தொல்காப்பியர் ஒன்பது இயல்களில் வகுத்துக்கொள்ள நன்னூலார் ஐந்து இயல்களாகச் சுருக்கிக் கொண்டுள்ளார். ஐரோப்பியர் தமிழ் இலக்கணத்தைப் படைக்கும் பொழுது இலத்தீன் இலக்கண மரபு சார்ந்த ஒரு பகுப்பை மேற்கொண்டுள்ளனர். சொல்லிலக்கணம் வேற்றுமை, காலம் இவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஓர் அமைப்பியல் பாகுபாட்டில் இலக்கணக் கூறுகளில் புடைப்பெயர்ப்புகளை விளக்குகின்றது. (ப.36, வீரமாமுனிவர் (1680-1749) தொன்னூல் அகப்பொருளிலக்கணம் காட்டும் சமத்துவக் கல்விக் கொள்கை (இரண்டாம் பகுதி), கி.நாச்சிமுத்து, மணற்கேணி இதழ் (பிப்ரவரி 2012). எழுத்துகளிடையிலான புணர்ச்சி மாற்றமே சொல்லாக்க வடிவங்களைத் தீர்மானிக்கின்றன எனும் நோக்கில் பெயர், வினையின் பகுப்புகள் அணுகப்பட்டுள்ளன. சொல்லதிகாரத்தில் தொடர் பற்றிய கருத்தாக்கத்தை உள்வைத்து அதன் பகுப்புகளை விளக்கியுள்ளனர். தொடரிலக்கணத்திற்கான அடித்தளத்தைச் சொல்லிலக்கணம் அமைத்துக் கொடுக்கின்றது.

தொடரிலக்கணம் பற்றிய பகுப்பு தமிழ் இலக்கணமரபில் இல்லை எனினும் தொடர் பற்றிய சிந்தனையை அது கொண்டுள்ளது. (ப.56, சொல்லிலக்கணக்

கோட்பாடு, தொகு.1, செ.வை.சண்முகம்). தொல்காப்பியர் தனது சொல்லதிகாரத்தை ஒருபாதி தொடரிலக்கண நோக்கிலும், ஒருபாதி சொல்லிலக்கண நோக்கிலும் அமைத்துக் கொண்டுள்ளார். ஐரோப்பிய மிஷனரிமார்களுக்கு தொடரிலக்கணத்தை அமைத்துக் கொடுப்பதே முக்கிய நோக்கமாக இருந்துள்ளதை எழுத்தியல் நிலையிலும், சொல்லியல் நிலையிலும் பார்க்க முடிகின்றது. வேற்றுமை, பெயர், வினை, இடை எனும் சொல்லிக்கணக் கூறுகள் தொடரமைப்பில் முக்கிய உறுப்புகளாக நின்று செயல்படுகின்றன.

தமிழின் தனித்தன்மையைக் காட்டும் பொருளிலக்கணம் அகம், புறம் எனும் பகுப்பில் இலக்கியத்திற்கான இலக்கணம் அல்லது வாழ்வியல் இலக்கணம் என்ற அணுகுமுறையில் அமைந்துள்ளது. இந்த அணுகுமுறையிலிருந்து மாறுபட்ட ஒரு பகுப்பினை ஐரோப்பியர் எழுதிய தமிழ் இலக்கண நூல்களில் பார்க்கலாம். பொருள் நூலமைவு, பொருண்மை அமைவு எனும் பகுப்புகளில் பொருளிலக்கணம் மாறுபட்ட அமைப்பைக் கொண்டுள்ளது. இலக்கண அமைப்புகளில் மரபிலக்கணங்களும், ஐரோப்பபியரின் இலக்கணங்களும் மாறுபட்டு நிற்கின்றன. தொல்காப்பியரின் நோக்கம் இலக்கணம் கற்பித்தல் என்பதைக் காட்டிலும் நூலமைப்பை, மொழியமைப்பை விளக்குவதில் முக்கியமாக இருந்துள்ளது. ஆனால் நன்னூலார் நோக்கம் முழுக்க முழுக்க கற்பித்தல் தன்மையில் அமைந்துள்ளதை அவரின் பாயிரப்பகுதியிலேயே தெளிவாக்கிக் கொள்ளலாம். தமிழ் மொழியைக் கற்பித்தல் எனும் நோக்கிலேயே படைக்கப்பட்டுள்ள ஐரோப்பியரின் இலக்கணங்கள் அமைப்பு நிலையிலும் விளக்க நிலையிலும் பொதுமையும் மாறுபாடும் கொண்டுள்ளன. (ப.78, தொல்காப்பிய பொருளதிகாரம் காட்டும் மொழிப் பொருண்மை அமைப்பு (கட்டுரை), தொல்காப்பியம்: பன்முக வாசிப்பு, க. பாலசுப்பிரமணியன்).

ஐரோப்பியரின் இலக்கணப் பகுப்பு

ஐரோப்பியர் உருவாக்கிய இலக்கணப் பள்ளிகள் வழியாக கிறித்துவப் பணியாளர்களுக்கு மொழியைக் கற்பித்தல், அதன் வழி மதப்பரப்பல் பணியில் ஈடுபடல் என்னும் இவர்களின் நோக்கம் ஒன்றாகவே இருந்துள்ளது. தகவல் பரிமாற்றத்தில் மொழியின் அவசியத்தை இவர்கள் உணர்ந்திருந்தனர். மதப்பரப்பலில் மொழியை உந்து சக்தியாகச் செயல்படுத்தும் நோக்கத்தை இவர்களின் இலக்கணப்பகுப்புகள் கொண்டிருந்தன. உரையாடல் நிலையிலான ஒரு முழுமையான தொடரைக் கட்டமைக்கும் முயற்சியை எழுத்து நிலையிலிருந்து கொண்டு வருகின்றனர். சீகன்பால்கு நெடுங்கணக்கை தமிழ்மொழியின் அக்கால வழக்கிலேயே பயன்படுத்தியுள்ளார். சொற்பிரிப்பை இவர் கொண்டிருக்கவில்லை. எழுத்துகள் அவற்றின் இடம் சார்ந்து (முதல், இடை, கடை) பெறும் உச்சரிப்பு மாற்றத்தை விளக்குகின்றார். பெஸ்கி, சீகன்பால்குவைப் பின்பற்றினாலும் நெடுங்கணக்கை சீர் செய்வதிலும் உச்சரிப்பு

தொடர்பான விதிகளைத் தருவதிலும் சில பகுப்பு நிலையைக் கையாள்கிறார். புணர்ச்சியைத் தனித்து விளக்கவில்லை எனினும் அதன் விதிகளை உணர்ந்துள்ளார் என்பதை அவரின் சொற்பிரிப்பு காட்டுகின்றது. இரேனியஸ் இவர்கள் இருவரைப் பின்பற்றினாலும் முன்னை இலக்கணங்களிலிருந்து மாறுபட்ட அமைப்புமுறையைப் பின்பற்றியுள்ளார். தமிழ் இலக்கணம் சார்ந்து புணர்ச்சியை திரிதல், கெடுதல், தோன்றல் எனும் நிலையில் விளக்குகின்றார். தொடராக்க நிலையில் எழுத்தின் தன்மையை முன்னிலைப்படுத்தும் விதத்தில் மூவரின் பகுப்பும் அமைந்துள்ளது. (ப.141, ஐரோப்பிய மொழிகளில் தமிழ் இலக்கண நூல்கள் (கட்டுரை), புத்தகம் பேசுது, தமிழ்ப் புத்தக உலகம், 1800 -2009, ஆசெர், ஆர்.இ., (தமிழில்:ஆர். பெரியசாமி).

சொல்லிலக்கணப் பகுப்பை சீகன்பால்கு, பெயர்-பெயரடை-பதிலீட்டுப்பெயர்-வினை-இடை எனும் பகுப்பில் தொடராக்க நிலையில் ஒன்றினை ஒன்று இயைபுபடுத்தும் நிலையில் அமைத்துள்ளார். ஒவ்வொரு பகுப்பின் கீழும் பயிற்சி முறையிலான நீண்ட பட்டியலைத் தருகின்றார். ஆனால் பெஸ்கி தனது பகுப்பை சீகன்பால்கு பகுப்பிலிருந்து எளிமைப்படுத்திக் கொண்டுள்ளார். முறையான வகைப்படுத்தலில் அறிவியல் அணுகுமுறையிலான ஒரு பகுப்பைக் கையாள்கிறார். இரேனியஸ் சொல்லிலக்கணத்தின் அடிப்படையாக இடைச்சொற்களை வைத்து அதிலிருந்தே ஏனைய பகுப்புகளை விளக்கிச் செல்கிறார். பெயரடை, வினையடை என்ற முன்னவர்கள் தனித்தனியே விளக்கியதை இவர் உரிச்சொல் எனும் பகுப்பின் கீழ் கொண்டு வருகிறார். மூவரின் பகுப்பு நிலையிலும் மாறுபடு தன்மை காணப்பட்டாலும் தொடரிலக்கணம் அமைப்பதற்கான கூறுகளைச் சொல்லிலக்கணத்தில் வைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார். இது அவர்களின் கோட்பாட்டுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. (ப.112-116, ஐரோப்பியரின் தமிழ் இலக்கணப்பார்வை, முனைவர் பட்ட ஆய்வேடு, ப. ஜெயபால்).

தொடரிலக்கணத்தை சீகன்பால்கு பால்பாகுபாட்டின் அடிப்படையில் வைத்து விளக்கிச் செல்கிறார். பெஸ்கி பெயர், வினை சார்ந்து வேற்றுமையையும், காலத்தையும் அடிப்படையாக அமைத்துக் கொண்டுள்ளார். இரேனியஸ் இடைச்சொற்களை மையக்கூறாகக் கொள்கிறார். வேற்றுமையுருபு, கால இடைநிலைகள் இவற்றை இடைச்சொல் பகுப்பிலேயே வைக்கின்றார். தொடரின் மையத்தைத் தீர்மானிப்பதில் மூவருக்கமான வேறுபாடு இருந்துள்ளது. பொருளிலக்கணத்தை பெஸ்கி மட்டுமே எடுத்துக்கொண்டு பேசுகின்றார். அயலவர்க்கு அடையாளப்படுத்தும் நோக்கில் அமைத்துக் கொள்ளும் இவர் இடமும் மொழியும் சார்ந்து பொருண்மை அமைவைத் தருகின்றார். இவரின் இலக்கணப் பகுப்புமுறையானது உலகப்பொருள் சார்ந்தும், இலக்கணப் பொருள் சார்ந்தும் சில பொருண்மை கருத்துருவாக்கங்களை உள்வைக்கின்றன. (ப.81-83, தொல்காப்பிய பொருளதிகாரம் காட்டும் மொழிப் பொருண்மை அமைப்பு (கட்டுரை), தொல்காப்பியம்: பன்முக வாசிப்பு, க. பாலசுப்பிரமணியன்).

பிரதி உருவாக்கம்

இலக்கணநூல் வழி மொழியைக் கற்பித்தல் என்பது ஆசிரியர் மாணவர் எனும் பிரிப்பு நிலையைப் பிரதிக்குள் வைக்கின்து. மொழியைப் பயிற்சி அடிப்படையில் புரிந்துகொள்ள முடியும் எனும் நிலையில் சீகன்பால்கு தனது இலக்கணத்தை அமைத்துள்ளார். பயிற்சி அடிப்படையிலான நீண்ட பட்டியலைக் கொடுத்துக் கொண்டே செல்கிறார். பெஸ்கி இந்த அமைப்பிலிருந்து மாறுபட்டு இலத்தீன், தமிழ் இரண்டையும் ஒப்பிட்டு கூறும் பகுப்பு நிலையைக் கையாள்கிறார். இரேனியஸ் தொடக்கம் முதல் தமிழுக்கு நிகரான ரோமன் எழுத்துப் பெயர்ப்பில் அமைத்துக் கொண்டுள்ளார். கற்பித்தல், கற்றல் நிலையில் மூவருக்குமான ஆசிரியத் தன்மை மாறுபடுகின்றன. ஆக, பிரதி உருவாக்கத்தில் மூவரும் தனித்தனியான கோட்பாட்டு நிலையைக் கொண்டுள்ளதை இது வெளிப்படுத்துகின்றது.

உலகம் முழுதும் சென்று இறங்கிய பாதிரிமார்களின் முதல் வேலை அந்நாட்டு மொழியைக் கற்றல். சொற்களைச் சேகரித்து அகராதி, இலக்கணநூல்களை உருவாக்குவது. தமிழகம் வந்த பாதிரிமார்களின் முதல் பணியும் இதுவாகவே இருந்துள்ளது. இவர்களின் நோக்கம் மதப்பரப்பல். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் இலக்கணநூல்களின் தேவையை அது உருவாக்கித் தந்தது. தமிழ்ச் சூழலில் சமயப் பின்னணியில் மடங்கள் சார்ந்து அறிவுசார் புலத்தை உருவாக்கிக்கொள்ளும் முயற்சியில் இலக்கணப் பிரதிகள் உருவாக்கம் பெற்றிருந்தன. (ப. 143, மொழியும் நிலமும், ஜமாலன்).

நவீன கோட்பாட்டுருவாக்கம்

மிஷனரிமார்களின் வருகை இந்த அமைப்பை மாற்றி அமைக்கிறது. ஒரு பக்கம் மரபு சார்ந்த இலக்கணங்கள் உருப்பெற்றிருக்க மறுபக்கம் முற்றிலும் அதிலிருந்து மாறுபட்ட இலக்கணங்கள் மிஷனரிமார்களால் உருப்பெற்றன. செய்யுள் வழக்கு, உயர்ந்தோர் வழக்கு சார்ந்து எழுதப்பட்டிருந்த இலக்கண நூல்களுக்கு எதிரான நிலையில் கொச்சை வழக்கிலான மொழியைக் கொண்டு இலக்கணப் பிரதிகள் உருவாக்கம் பெற்றன. இலக்கண உருவாக்கத்தில் வாசகன் மாறுபடுவதும், மொழிவழக்கு மாறுபடுவதும் நவீனம் நோக்கிய பண்பாட்டு மாற்றமாக உருவெடுக்கிறது. இந்தப் பண்பாட்டு மாற்றத்தின் மற்றொரு முக்கியக்கூறு அச்சு ஊடகத்தின் வருகை. எழுத்துகளை, அதன்வழி கருத்துருவாக்கங்களைப் பிரதியின் நிலைபேறாக்கம் செய்ததில் ஓர் அளப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது.

எழுத்துநிலையில் மணலிலும், ஓலைச்சுவடியிலும், கல்வெட்டிலும் எழுதப்பட்டிருந்த வடிவங்கள் அச்சுவடிவம் பெறல், எழுத்துச் சீர்மை பெறல், சந்திபிரிப்பு என்று காட்சிப்புலனூடாகப் பிரதி மாற்றம் பெறுகின்றன. இலக்கண நூலமைப்பில் இருந்த வரையறையை அச்சு ஊடகமும், பாதிரிமார்களின் படைப்பாளுமையும் மரபை

மடைமாற்றம் செய்கின்றன. இலக்கணக் கட்டமைப்பில் அமைத்துக் கொண்டுள்ள புதுமையாக்கம், பகுப்பு நிலையில் செய்துள்ள எளிமையாக்கம், இருமொழிகளுக்கு இடையிலான ஒப்புமையாக்கம், புதிய கலைச்சொற்றகளின் உருவாக்கம் என்ற பல நிலைகளிலும் புத்துருவாக்கம் பெற்று நவீன இலக்கணங்களாக உருப்பெற்றிருந்தன. அளவிலும், திட்டமிட்ட முறையிலான ரோமன் எழுத்துப் பெயர்ப்பபைக் கையாளும் விதத்திலும் தமிழ்மொழியை உலகளாவிய நிலைக்கு இப்பிரதிகள் எடுத்துச் சென்றன. தமிழ்மொழி தனிக்குடும்பமொழி என்று அதன் இனத்தை அடையாளப்படுத்தும் பணியில் இவை ஆணிவேராக நின்று செயல்பட்டுள்ளன. (ப. 236, ஐரோப்பியரின் தமிழ் இலக்கணப்பார்வை, முனைவர் பட்ட ஆய்வேடு, ப. ஜெயபால்).

கிறித்துவ மதப்பரப்பல், காலனிய நிர்வாகம் என்று இவர்களின் நோக்கம் வேறாக வெளிப்பட்டாலும் அதனூடாக மொழி சில வளர்ச்சி மாற்றங்களைக் கண்டுள்ளது. மக்களின் பயன்பாட்டில் இருந்த சொற்களைச் சேகரித்து அதன்வழி இலக்கணம் படைத்தல் என்பது தகவல் பரிமாற்றத்தின் சமகால தேவையை நிர்ணயம் செய்கின்றது. செய்யுள் அமைப்பிலான இலக்கண வடிவம் உரைநடை விளக்கமாக மாற்றம் பெற்றுள்ளது. தொடரிலக்கண அறிமுகம் உரைநடை வகையைத் தோற்றம் பெறச்செய்தது. இது வெறுமனே இலக்கண மாற்றமாக அமையாமல் பண்பாடு, கருத்தியல் ரீதியான கோட்பாடு மாற்றமாக உருவாக்கம் பெற்றது. பல்வேறு படிநிலைகளில் பல்துறைகளிலும் நவீன சிந்தனையை உருவாக்கித் தந்ததில் உரைநடை முன்படித்தானது. எழுத்து நிலையிலும் வாசிப்பு நிலையிலும் மரபைப் புறந்தள்ளிவிட்ட நவீனம் சார்ந்த பண்பாட்டை உருவாக்கிக் கொண்டதில் அச்சு ஊடக வருகையும், மேனாட்டவரின் செயல்பாடும் மிக முக்கியமானது. மொழிப் பொதுமையாக்கத்தில் மரபுரீதியான கோட்பாட்டுத் தளங்கள் தகர்க்கப்பட்டு நவீன கோட்பாட்டுத் தளங்களை அமைத்துக்கொண்டன.

Reference Books

1. A Grammar of the Common Dialect of the Tamil Language (Koduntamil), Constantius Joseph Beschi (Au.), George William Mahon (Tr.), Sarasvati Mahal Library, Gajendra Printers, 57, South Car Street, Chidambaram, 1997.

2. Tamil Language for Europeans: Ziegenbalg's Grammatica Damulica (1716), Daniel Jeyaraj, Harrassowite Verlag, Wiesbaden, 2010.

3. A Grammar of the Tamil Language with an Appendix, C.T.E.Rhenius, P.R.Hunt, American Mission Press, Madras, 1846.

4. தொல்காப்பிய உருவாக்கம், ச. அகத்தியலிங்கம், மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், 2001.

5. இலக்கணவியல் மீக்கோட்பாடும் கோட்பாடுகளும், சு.இராசாராம், காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில், 2010.

6. திராவிடச் சான்று, எல்லிஸீம் திராவிட மொழிகளும், தாமஸ் டிரவுட்மன் (தமிழில் – இராம.சுந்தரம்), காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில், 2007.

7. வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம், இரா. திலகா, அருள் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை, 2011.

8. முன்னோடி மிஷனரிமார்களின் வரலாறு, எஸ். தேவசகாயம் பொன்ராஜ், மிஷன் எஜிகேஷனல் புக்ஸ், பீகார், 1994.

9. தமிழ்மொழி இலக்கண இயல்புகள், அ. சண்முகதாஸ், பூபாலசிங்கம் புத்தக சாலை, கொழும்பு, 1997.

10. ஐரோப்பியரின் தமிழ் இலக்கணப்பார்வை, ப.ஜெயபால், முனைவர் பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், 2013.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

ஜெயபால். ப, “இலக்கண மீளுருவாக்கத்தில் மிஷனரிமார்களின் பங்கு” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜுலை 2025, பக். 1-10

Cite this Article in English

Jayapal. P, “The Role of Missionaries in Tamil Grammatical Reconstruction” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 1-10

அகநானூற்றில் அணங்கு என்னும் சொல்லாடல்

The Word Anangu in Agananooru

கீர்த்தனா. அ*, சங்கீதா. ப*

*தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் மற்றும் தமிழ்க் கல்லூரி,பேரூர், கோவை- 641 010.

Keerthana.A*, Sangeetha.P*,

*Department of Tamil, Thavathiru santhalinga Adigalar Arts Science Tamil College, Perur, Coimbatore- 641 010

ORCID ID: https://orcid.org/0009-0001-0227-3411

DOI: 10.5281/zenodo.16400533

Abstract

Sangam literature reflects the life of the people who lived in Sangam period. Sangam literature has two sections, namely, agam and puram. Among them, the agam texts not only describe the love life of the Sangam people. They are sources that reveal the emotions, beliefs and culture of the people. Among the other agam books in sangam literature agananooru is a book with unique content with special reservoir of words. The purpose of this article, under the title "Akananuruil Anangu Ennum Solladal", is to analyze and explain the verbal meanings of Anangu in terms of beliefs, parables and emotions.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் சங்க கால மக்களின் வாழ்வினை பிரதிபலிக்கிறது. சங்க இலக்கியங்கள் அகம்,புறம் என இருப்பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் அகநூல்கள் சங்க கால மக்களின் களவு வாழ்வினை மட்டுமல்லாது, அம்மக்களின் உணர்ச்சிகள், நம்பிக்கைகள் மற்றும் அவர்களின் பண்பாடினை வெளிக்கொணரும் ஆதாரங்களாக அமைகிறது. சங்க இலக்கியங்களில் பல அகம் சார்ந்த நூல்கள் இருப்பினும, அவற்றுள் அகநானூறு தனித்தப் பொருண்மைச் சிறப்பினைக்கொண்ட சொற்களஞ்சியமாகத் திகழ்கிறது. “அகநானூற்றில் அணங்கு என்னும் சொல்லாடல்” என்னும் தலைப்பின் கீழ் அணங்கு என்னும் சொல்சார்ந்தப் பொருள்களை நம்பிக்கைகள், உவமைகள் மற்றும் மெய்பாடு முதலிய பொருண்மைகளில் பகுத்து ஆராய்ந்து எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

key words: Anagu, Beliefs, Parables, Emotions, Akananooru, Sangam Literature, அணங்கு, நம்பிக்கைகள், உவமைகள், மெயபாடு, அகநானூறு, சங்க இலக்கியம்.

முன்னுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை மக்களிடையே இறை நம்பிக்கை மேலோங்கி இருப்பதனை இலக்கியப்பதிவுகள் வழி அறியமுடிகிறது. பழங்கால மக்கள் இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட அச்சத்தினை நீக்க, இயற்கையைத் தெய்;வங்களாக உருவகப்படுத்தினர். அத்தெய்வங்களுக்குப் பலிக் கொடுத்தும், விழாக்கள் நிகழ்த்தியும் வழிபட்டனர். இவ்வாறு வழிபட்டால் இயற்கைச் சீற்றங்களால் தங்களுக்கு துன்பம் நேராது என்றும் நம்பினர். இந்த நம்பிக்கை இன்றும் மாறாமல் மக்களால் பின்பற்றப்படுகிறது. சங்ககால மக்கள் சிறுதெய்வங்களை வழிபட்டனர். அவை மக்களைக் காக்கும் தெய்வங்களாக சங்க இலக்கியங்களில் காட்சிப்படுத்துகின்றன. தெய்வங்கள் மற்றும் பேய்களைக் குறிப்பதற்கு 'அணங்கு' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. இச்சொல்லானது இலக்கியங்களில் சில பாடல்களில் உவமையாகவும், மேலும் சில பாடல்களில் அச்சம் மற்றும் வருத்துதல் ஆகிய உணர்ச்சிகளுக்கு பொர்ுளாக பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே சங்ககால மக்களின் வாழ்வியலில் அணங்கு என்ற சொல் சார்ந்த பொருள் மரபுகளை சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான அகநானூற்றின் வழி ஆராயப்படுகின்றது.

மரபு விளக்கம்

> **"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
>
> **செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு." (நன்.நூற்பா-387)**

என்று நன்னூல் கூறுகிறது. சான்றோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி கூறினார்களோ அம்முறையைப் பின்பற்றி வழங்குதல் மரபாகும் என்பது இந்நூற்பாவில் விளக்கமாகும். முன்னோர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு முதலியவற்றை மாற்றாமல் கடைபிடித்தல் மரபாகும். மரபு பற்றி தொல்காப்பியர் குறிப்பிடும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்.

> **"வழக்குஎனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
>
> **நிகழ்ச்சி அவர்கட் டாகலான." (தொல்.-1592)**

என்று தொல்காப்பியம் மரபு பற்றி இயம்புகிறது. வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் வழக்கு என்று உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே மரபு என்பது மக்களால் ஏற்றுக் கொள்;ளப்பட்ட அல்லது மக்களால் வருங்கால சந்ததிக்கு கடத்தப்படும் தொடர்ச்சியான பாரம்பரியம் என்று கூறப்படுகிறது.

அணங்கு

அணங்கு என்ற சொல்லானது முதன் முதலில் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் நூற்பாவில் இடம்பெற்றுள்ளது.

> **“அணங்கே விலங்கே கள்வர் தம்இறை**
>
> **பிணங்கல் சாலா அச்சம் நான்கே.”** (தொல்.மெய்ப்பாட்டியல் - 252)

இந்த நூற்பாவில் அச்சம் என்ற மெய்ப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக அணங்கு விளங்குகிறது. காண்போர்க்கு அச்சம் தரும் பேய், பூதம் மற்றும் வருத்தும் தெய்வம் ஆகிய பொருள்களில் தொல்காப்பியர் கூறியுள்ளார். அணங்கு என்பதற்கு அச்சம், அணங்கென்னேவல், அழகு, ஆசை, கொலை, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க்காடுங் கூத்து, நோய், பெண்மகள், பேய்மகள், ரோகம், வருத்தம், வருத்துந் தெய்வம், விரும்புதல் என்று தமிழ் பேரகராதி பொருள்படுத்துகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின் சங்க இலக்கிய நூலான அகநானூற்றில் தெய்வமாகவும், உவமையாகவும், அச்சம், வருத்தம், துன்பம் ஆகிய பொருள்களைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்படுத்தியுள்ளனர். எனவே தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு இச்சொல்லானது பரிணாம வளர்ச்சி பெற்று பிற பொருள்களிலும் வந்துள்ளமை உற்றுநோக்கத்தக்கது. தற்கால இலக்கியங்களிலும் இச்சொல் இடம்பெற்றுள்ளது. பிங்கல நிகண்டு அணங்கு என்ற சொல்லுக்கு பின்வருமாறு விளக்கமளிக்கிறது.

> **“சூரே யணங்கு கடவு டெய்வாந்**
>
> **தேவுபுத் தேளியவு டெய்வ மாகும்.”** (பிங்.நி.-184)

தெய்வப்பெண் அல்லது தெய்வம் என்று பிங்கல நிகண்டு பொருள்படுத்துகிறது. இப்பொருளையே திவாகர நிகண்டும,; சூடாமணி நிகண்டும் கூறுகிறது. பிற்கால இலக்கியங்களில் அணங்கு என்ற சொல் காணப்படுகிறது. திருக்குறளில் திருவள்ளுவரும் தெய்வம் என்ற பொருளில் இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

> **“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
>
> **மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.”** (குறள் - 1081)

இக்குறளில், அணங்கு என்ற சொல்லுக்கு பரிமேலழகர் தெய்வமகள் எனப் பொருள்படுத்துகிறார். மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய மனோன்மணீயம் என்ற நாடக நூலில் இடம் பெற்ற தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலில் “தமிழணங்கே” என்ற சொல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியைத் தமிழ்தெய்வம் என்று போற்றுகின்றார்.

அகநானூறு

சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இருபெரும் பிரிவுகளை உடையது. இப்பிரிவுகளுள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக அகநானூறு வைக்கப்பட்டுள்ளது. அகநானூறு முப்பகுப்புகளைக் கொண்ட நூலாகும். அவை களிற்றுயானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை ஆகும். களிற்றுயானை நிரை 120 பாடல்களையும், மணிமிடைபவளம் 180 பாடல்களையும், நித்திலக்கோவை 100 பாடல்களையும் கொண்டதுள்ளன. இந்நூலானது 400 பாடல்களின் தொகுப்பாகும். இதன் அடியளவு 13 முதல் 31. இதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மன் ஆவார். தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்று அறியப்படுகிறது. 143 புலவர்களால் இயற்றப்பெற்ற பாடல்களின் தொகுப்பாகும். இந்நூலில் ஒற்றைப் படையாக வரும் எண்களில் அமைந்த பாடல்கள் அனைத்தும் (1,3,5,7,9) பாலைத்திணைப் பாடல்களாகும். 2,12,22,8,18,28 என வரும் பாடல்கள் குறிஞ்சித்திணை. 4,14,24 என வரும் பாடல்கள் முல்லைத்திணை. 6,16,26 என வரும் பாடல்கள் மருதத்திணை. 10,20,30 என வரும் நெய்தல் திணைப் பாடல்களாகும்.

அணங்குசார் நம்பிக்கைகள்

ஒரு மனிதன் அல்லது ஒரு குழு கருத்தின் மீது கொண்ட பற்று நம்பிக்கையாக உருக்கொள்கிறது. அக்கருத்து உண்மையானதாகவும் இருக்கலாம், பொய்யான கருத்தாகவும் இருக்கலாம். ஆனால் அக்கருத்தினை உண்மை என்று நம்பும் நிலை நம்பிக்கையாகும். சங்க இலக்கியங்களில் நிமித்தம், மறுபிறவி, இறைவன் முதலிய பல நம்பிக்கைகளைக் காண முடிகிறது. இதுபோலவே, அகநானூற்றில் இடம் பெற்றுள்ள நம்பிக்கைகளுள் ஒன்றாக அணங்கு திகழ்கிறது. பருவப்பெண்கள் வெளியே சென்றால் வருத்தும் தெய்வம் துன்பம் செய்யும் என்னும் நம்பிக்கை கயமனார் இயற்றிய பாலைத்திணைப் பாடலில் காணமுடிகிறது. அப்பாடல் பின்வருமாறு,

“அலமரல் ஆயமொ டியாங்கணும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங்குடைய
காப்பும் பூண்டிசின் கடையும் போகலை...”   (அகம்.-7)

இப்பாடலில் அணங்கு என்ற சொல்லானது வருத்தும் தெய்வத்தைக் குறிக்கிறது. செவிலித்தாய் உடன்போக்கு சென்ற தலைவியைப் பற்றி வழியிடை கண்ட பெண்ணொருத்தியிடம் வினவுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. “பேதைப் பருவம் நிறைவடைந்து பெதும்பைப் பருவம் அடைந்த பெண்ணாகிவிட்டாய். எனவே காவல் பூண்டாய். பழமையான முதுபதியிடத்து வருத்தும் தெய்வம் இருக்கிறது வெளியே செல்லாதே” என்று செவிலித்தாய் தலைவியிடம் கூறியதாக வழியிடை கண்ட பெண்ணிடம் கூறுகிறாள். இக்கூற்றின் வழி சங்ககாலத்தில் பருவமடைந்த பெண்களை

வெளியே செல்ல அனுமதிக்கவில்லை என்பது தெளிவாகிறது. பருவம் எய்திய பெண்கள் வெளியில் சென்றால் வருத்தும் தெய்வத்தால் துன்பம் ஏற்ப்படும் என்ற நம்பிக்கை இருந்தமைக்கு இப்பாடல் சான்றாக அமைகிறது. இவ்வழக்கமானது, இன்றும் தமிழக மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இன்றும் பருவடைந்த பெண்களை சில நாட்களுக்கு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. இவ்வழக்கமானது சங்ககால மக்களின் நம்பிக்கையின் எச்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

மலைகளில் தெய்வங்கள் உறையும் என்ற நம்பிக்கை பற்றி வெறிபாடிய காமக் கண்ணியார் குறிஞ்சித்திணைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

“அணங்குடை நெடுவரை யுச்சியின் இழிதருங்

கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்…” **(அகம்.-22)**

இப்பாடலில் அணங்கு என்ற சொல்லானது தெய்வத்தைக் குறிக்கும். தலைவி தலைவனின் நாட்டைப் பற்றிக் கூறும்பொழுது தெய்வமுறைகின்ற நீண்ட மலை உச்சியிலிருந்து அருவி ஒழுகுகின்ற மலைநாடன் என்று தலைவி குறிப்பிடுகிறாள். இக்கூற்றின் வழி தெய்வம் மலை உச்சியில் உறையும் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடம் இருந்தமை இப்பாடல் தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த நம்பிக்கை இன்றும் மக்களால் நம்பப்படும் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை தற்காலத்தில் இருப்பதற்குச் சான்றாக மலைக்கோவில்கள் அமைந்துள்ளன.

அணங்குசார் உவமைகள்

ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டு பொருள் விளங்குமாறு கூறுவது உவமை எனப்படும். இந்த உத்தியை சங்க புலவர்கள் தங்கள் பாடல்களில் திறம்பட பயன்படுத்தியுள்ளனர். அணங்கு என்ற சொல்லை பெண்களுக்கு உவமையாக புலவர்கள் கையாண்டுள்ளனர். இதற்குச் சான்றாக சாகலாசனார் இயற்றிய மருதத்திணைப் பாடல் அமைகிறது.

“தணங்கருங் கடவு ளன்னோள் நின்

மகன்தா யாதல் புரைவதாங் கெனவே…” **(அகம்-16)**

இப்பாடலில் தலைவி “பரத்தையை வானத்;து அணங்கு போன்றவள்” என்று குறிப்பிடுகிறாள். பரத்தைக்கு வானத்து அணங்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. இவ்விடத்து வானத்து அணங்கு என்பது அருந்ததியைக் குறிக்கும். அருந்ததி சிறந்த கற்புடையவள் என்று புராணம் கூறுகின்றது. பரத்தையை கற்பிற்கு இலக்கணமாகத் திகழும் அருந்ததியோடு ஒப்பிட்டு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பரத்தையை இழிவாகக் கருதும் சமூகத்தில் பரத்தையை இவ்வாறு பரத்தையை உவமித்திருப்பது புலவரின் நுண்ணறிவையும் உவமை கூறும் திறத்தையும் புலப்படுத்துகிறது.

மெய்ப்பாடு

பிறர் அறியும்படி உடம்பின் வழிப் உணர்ச்சியைப் புலப்படுத்திக் காட்டுவது மெய்ப்பாடாகும். தொல்காப்பியத்தில் அச்சம் என்ற மெய்ப்பாட்டிற்கு சான்றாகக் கூறப்பட்ட அணங்கு சங்க இலக்கியத்தில் அச்சம் என்ற உணர்ச்சியைக் குறிக்கும் சொல்லாக மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கருத்திற்குச் சான்றாக தங்காற் பொற்கொல்லனார் இயற்றிய குறிஞ்சித்திணைப் பாடல் அமைகிறது.

"விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ யரவின்
அணங்குடை யருந்தலை பைவிரிப் பவைபோல்..." **(அகம்-108)**

இப்பாடலில், பொறி விரவிய மயிலுக்குப் அஞ்சிய பாம்பு என்ற தொடரை தலைவிக்கு தலைவனின் நாட்டை பற்றி தோழி எடுத்துரைக்கும் பொழுது கூறுகிறாள். மயிலுக்கு அஞ்சிய பாம்பு என்ற தொடரில் அஞ்சிய என்பதற்கு புலவர் அணங்கு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இவ்விடத்து அணங்கு என்ற சொல்லானது அச்சம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது.

முடிவுரை

சங்க நூல்களில் ஒன்றான அகநானூற்றில் முப்பது இடங்களில் அணங்கு என்ற சொல் இடம்பெற்றுள்ளது. அணங்கு என்ற சொல்லானது பல பொருள் ஒரு சொல் என்ற வகையைச் சேர்ந்த சொல்லாகும். பிற்கால அகராதி நூல்கள் அணங்கு என்ற சொல்லிற்கு பல பொருள்களைக் கூறுகின்றன. அகநானூற்றில் இச்சொல் தெய்வம், வருத்தும் தெய்வம், அச்சம், துன்பம் ஆகிய பொருள்களில் வந்துள்ளது. அணங்கு சார்ந்த நம்பிக்கைகள் சங்ககால மக்களிடம் இருந்தமை அகநானூறு நூலின் வழி அறிய முடிகிறது. மலைகளில் தெய்வங்கள் உறையும், பருவமடைந்த பெண்கள் வெளியே சென்றால் வருத்தும் தெய்வத்தால் துன்பம் நேரும் முதலிய நம்பிக்கைகள் சங்ககாலத்தில் மட்டுமல்லாது தற்கால மக்களிடமும் காண முடிகிறது. எனவே இவை சங்ககால நம்பிக்கையின் எச்சமாகத் திகழ்கிறது. பல நூற்றாண்டுகள் கடந்தும் இதுபோன்ற நம்பிக்கை பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. சங்க புலவர்கள் அணங்கினை பரத்தை மற்றும் தலைவியை உவமிக்கப் பயன்படுத்தியுள்ளனர். இதில் பரத்தையை வானத்து அணங்கோடு ஒப்பிட்டுள்ளமை சிறப்புவாய்ந்தது. தொல்காப்பியத்தில் அச்ச மெய்ப்பாட்டிற்கு சான்றாகப் பயன்படுத்தப்பட்ட சொல் சங்க இலக்கியத்தில் அச்சம் என்ற பொருளுடைய சொல்லாகப் பயன்படுத்தியிருப்பது சுட்டிக் காட்டத்தக்கது. இதன் வழி அணங்கு என்ற சொல்லானது தனக்கென தனித்த மரபினை உடையச் சொல்லாகத் திகழ்வதை அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. சங்கரலிங்க முதலியார்,எஸ்.,(ஆ.), தமிழ்ப் பேரகராதி (தொகுதி-1), தமிழ்மண் பதிப்பகம் சென்னை - 600 017, மு.ப - 2008.
2. சுப்பிரமணியம்., ச.வே.,(பதி.), தமிழ் நிகண்டுகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001, மு.ப - 1935.
3. திருஞானசம்பந்தம்,ச.,(உரை.), கதிர் பதிப்பகம், திருவையாறு - 613 204, மு.ப - 2020.

References

1. S. Sankaralinga mudaliar, Tamil Dictionary (volume – 1), Tamilman Publishing house, Chennai – 600 017, 1st Edition –2008.
2. S.V. Subramaniam, Tamil Glossary (Nigandhugal), Meiyappan Publishing house, Chidambaram – 608 001, 1st Edition-1935.
3. Dr. S. Thirugnanasambandham, Kathir Publishing House, Thiruvaiyaru - 613 204, 1st Edition -2020.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

கீர்த்தனா. அ, சங்கீதா. ப, "அகநானூற்றில் அணங்கு என்னும் சொல்லாடல்" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜூலை 2025, பக். 1-10

Cite this Article in English

Keerthana.A, Sangeetha.P, "The Word Anangu in Agananooru" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 11-17

கவிதையை அறிதலில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சவால்கள்

[ஞானக்கூத்தனின் பாலாஜிக்கு ஹரேராம் என்ற கவிதையை முன்வைத்து]

Challenges faced by the visually impaired in acknowledging poetry

(Based on Gnana Koothan's "Balajikku hareram" poem)

மகாலிங்கம்.மு*, ராம்ராஜ். லி*

*தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

Mahalingam.M*, Ramraj.L*

*Department of Tamil, PSG College of Arts and Science Coimbatore

ORCID: https://orcid.org/0009-0002-1511-5663

DOI: 10.5281/zenodo.16400544

Abstract

In the contemporary creative landscape, characterized by a proliferation of novel poetic expressions, the representation of visually impaired creators remains notably sparse. This disparity necessitates an examination of the underlying factors, encompassing creative politics, educational frameworks, and the nuanced visual experiences of visually impaired individuals.

Despite their forays and achievements across diverse domains, the persistent underrepresentation of visually impaired individuals within the realm of modern poetic creation warrants in-depth analysis.

It is crucial to acknowledge the dichotomy within the visually impaired community, distinguishing between those with congenital visual impairment and those who acquired it later in life. This distinction engenders divergent perceptions and interpretations of environmental stimuli. This divergence introduces complexities in defining the interplay between creative output, the creator, and the contextual milieu.

It is posited that consistent engagement with poetic literature and sustained creative practice, grounded in comprehension, familiarity, and experiential depth, can cultivate both poets and critics of modern poetry. This assertion is made with the understanding that congenital or acquired visual impairment does not pose an

insurmountable barrier to such development. To substantiate this claim, this study undertakes an evaluation of Gnana Koothan's "Balajiku Hareram" through an analysis derived from field research and discussions with contemporary visually impaired individuals actively involved in modern poetry.

ஆய்வுச் சுருக்கம்

எண்ணற்ற புதுக் கவிதைப் படைப்பாளிகள் பெருகிவரும் இன்றைய படைப்பியல் சூழலில், பார்வை மாற்றுத்திறனாளிப் படைப்பாளர்கள் குறைவுபட்டே இருக்கின்றனர். இந்த நிலைக்குக் காரணம் படைப்பரசியலா? கல்விச் சூழலா? பார்வை மாற்றுத்திறனாளிகளின் காட்சி அனுபவம் குறைவுபெற்றிருப்பதா? என்பதையெல்லாம் ஆராய வேண்டியுள்ளது. அனேக துறைகளில் பயணித்தும் தடம் பதித்தும் வரும் பார்வை மாற்றுத்திறனாளிகளால் இன்னும் ஏன் புதுக்கவிதை படைப்புலகில் தொடர்ந்து பயணிக்கவும் தடம் பதிக்கவும் முடியவில்லை என்பதையும் ஆராய வேண்டியுள்ளது.

பார்வை மாற்றுத்திறனாளிகளுள் பிறவியிலேயே பார்வையை இழந்தவர்கள், இடையில் பார்வையை இழந்தவர்கள் என்று அடிப்படையில் இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். இவர்களுக்கிடையேயான புரிதல் பலவிதங்களில் வேறுபட்டது என்பதால் தன்னைச் சுற்றி நிகழ்கின்ற சூழல் அசைவுகளை இருவரும் புரிந்துகொள்ளும் விதமும் ஒன்றொடொன்று வேறுபட்டதே. இந்த முரணில் படைப்பு, படைப்பாளி இந்த இரண்டையும் தீர்மானிக்கும் சூழல் ஆகியவை சிக்கலுக்குள்ளாகின்றன என்பது புரிதல்.

தொடர்ந்த கவிதைவாசிப்புப் பழக்கம், தொடர்ந்து கவிதை எழுதும் தன்மை இருக்கும் எவராலும் புரிதல், பழக்கம், அனுபவத்தின் அடிப்படைகளில் புதுக் கவிதைப் படைப்பாளியாகவும் விமர்சகராகவும் மாறிவிடமுடியும். முழுப் பிறவி மற்றும் இடைநிலைப் பார்வைக் குறைபாடு இதற்குத் தடையில்லை என்ற கருதுகோலை முன்வைத்து, ஞானக்கூத்தனின் "பாலாஜிக்கு ஹரேராம்" என்ற கவிதையைச், சமகாலத்தில் தொடர்ந்து புதுக்கவிதை வாசிப்பிலும் படைப்பிலும் ஈடுபட்டுவரும் பார்வை மாற்றுத்திறனாளிகளிடத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு கலந்துரையாடலைக் கொண்டு, மதிப்பிட்டு விளக்கித் தெளிவுபடுத்துவதே இவ்வாய்வாகும்.

Keywords : கவிதையாக்கச் செயல்பாடு, கவிதை வாசிப்பு, கவிதையை அறிதல், பார்வைமாற்றுத் திறனாளிகள் வகைபாடு, பார்வைமாற்றுத் திறனாளிகளின் சவால்கள், ஞானக்கூத்தன் கவிதைகள், பாலாஜிக்கு ஹரேராம், வாசிப்புச் சிக்கல், படைப்புச் சிக்கல், தமிழ் இலக்கிய வரலாறு, பார்வைமாற்றுத் திறனாளிகளின் இலக்கிய வெளி

முன்னுரை

தமிழ் இலக்கிய வகைமைகளான, சங்க இலக்கியம் தொடங்கி இன்றைய நவீன இலக்கியம் வரை, பார்வை மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியம், படைப்பியம், படைப்பாளிகள் குறித்த பதிவிடம் என்பது மிகமிக சொர்ப்பமே. மிக விரைவாகவே விரல்விட்டுச்சொல்லிவிடமுடியும்இவர்களுக்கானபதிவிடத்தை.இந்நிலைக்குக்காரணம் படைப்பரசியலா? கல்விச் சூழலா? பார்வை மாற்றுத்திறனாளிகளின் வாழ்விருப்புக் குறைவு பெற்றிருந்ததா? இதில் எதையும் அறிதியிட்டுச் சொல்லமுடியவில்லை. இரட்டைப்புலவர்கள், தண்டியடிகள், அந்தகக்கவி வீரராகவர், மாம்பழக் கவிராயர் போன்றோர் இலக்கியத்தில் பதிவிடம் பெற்றிருக்கும் பார்வை மாற்றுத்திறனாளி படைப்பாளிகள்.

உணர்வுகளின் வெளிப்பாடே படைப்பு. அந்தப் படைப்பானது மொழி என்ற பரிமாற்றக் கருவியைக் கொண்டு உணர்வுகள் நிரம்பிய கவிதை என்ற வகைமையாக உருப்பெறுகிறது. அந்தக் கவிதையின் கர்த்தா கவிஞனாகிறான். கவிதையின் சூழலில் இருந்து அனுபவம் பெறுபவன் ரசிகனாகிறான். அந்த அனுபவத்தை ஆய்பவன் விமர்சகனாகிறான். ரசிகனுக்கும் விமர்சகனுக்கும் அனுபவம் ஒன்றே. அடிப்படையில் ரசிகனும் விமர்சகனும் வாசகனே.

தமிழிலக்கியம் காலங்களின் நகர்வில் மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீனக்கவிதை என்ற முப்பெரும் வகைமைகளைப் படைப்பு வெளியில் தகவமைத்து வந்துள்ளது. இந்த வகைமைகளுக்குத் தன்னை தகுதிபடுத்திக் கொண்ட கவிதைகளே சிறப்பு நிலையில் மரபுக்கவிதைகளாகவும், புதுக்கவிதைகளாகவும், நவீனக்கவிதைகளாகவும் நிலைபெற்றுவருகின்றன. இந்தச் சூழலில் தனது அன்றாட வாழ்வியல் ஓட்டத்தின் படிநிலைச் சவால்களைக் கடந்து புதுக்கவிதைப் படைப்பாளிகளாகவும் வாசகர்களாகவும் உருப்பெறும் பார்வை மாற்றுத்திறனாளிக் கவிஞர்களின் தகவிடமும் கவிதைப் படைப்புலகில் குறிப்பிடத் தகுந்ததே! அதிலும் குறிப்பாகப் புதுக்கவிதைப் படைப்பியல் பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கொள்ளலாம்.

தொடர்ந்த கவிதை வாசிப்புப் பழக்கம், தொடர்ந்து கவிதை எழுதும் தன்மை இருக்கும் எவராலும் புரிதல், பழக்கம், அனுபவத்தின் அடிப்படையில் புதுக்கவிதைப் படைப்பாளியாகவும் விமர்சகராகவும் மாறிவிடமுடியும். முழுப் பிறவி மற்றும் இடைநிலைப் பார்வைக் குறைபாடு இதற்குத் தடையில்லை என்ற கருதுகோளின் அடிப்படையில், ஞானக்கூத்தனின் பாலாஜிக்கு ஹரேராம் என்ற கவிதையைச், சமகாலத்தில் தொடர்ந்து கவிதை வாசிப்பிலும் படைப்பிலும் ஈடுபட்டுவரும் பார்வை மாற்றுத்திறனாளிகளிடத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுக் கலந்துரையாடலைக் கொண்டு, மதிப்பிட்டு விளக்கித் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பார்வை மாற்றுத்திறனாளியமும் படைப்புச் சூழலும்

பொதுவாகப் பார்வை மாற்றுத்திறனாளிகளுள் பிறவி மற்றும் இடைநிலைப் பார்வை மாற்றுத்திறனாளிகளென்று இருவகைப் பிரிவினர் இருக்கின்றனர். அதிலும் அவர்களின் பார்வைத் திறனைப் பொறுத்து முழு மற்றும் பகுதிப் பார்வை மாற்றுத்திறனாளிகளென்று மேலும் இருவகையில் பிரிக்கப்படுகின்றனர். இந்த ஆய்விற்கு முழுப்பிறவி மற்றும் இடைநிலைப் பார்வை மாற்றுத்திறனாளிகள் இருவகைப் பட்டவர்களுமே தகவலாளிகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த முழுப்பிறவி மற்றும் இடைநிலைப் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான புரிதல் பலவிதங்களில் வேறுபட்டது என்பதால் தன்னை சுற்றி நிகழ்கின்ற ஒளி, ஒலி சார்ந்த இயக்கங்களை இருவரும் புரிந்துகொள்ளும் விதமும் ஒன்றொடொன்று வேறுபட்டதே. இந்த அடிப்படையில் படைப்பாளி, வாசகன் இந்த இரண்டையும் தீர்மானிக்கும் சூழல் சிக்கலுக்குள்ளாகின்றது என்பது புரிதல். ஏனென்றால், பார்வை மாற்றுத்திறனாளிகள் வளர்ந்துவரும் வாழ்விடங்களான இல்லம், பள்ளி, கல்லூரி, பணியிடம், வியாபாரத்தலம் ஆகியவைகளே அவர்களின் வாசிப்புத் திறத்தையும், படைப்புத் திறத்தையும் தீர்மானிக்கின்றன. எனவே அடிப்படையில் புறவய கட்டமைப்புகளால் உருவாகின்ற அல்லது உருவாக்கப்படுகின்ற பார்வை மாற்றுத்திறனாளிகளின் படைப்பியல் சார்ந்த வாழ்வியலானது அடிப்படையிலேயே சிக்கலுக்குள்ளாகின்றது. தனக்குள் படைக்கும் திறன் இருந்தும் இப்படிப்பட்ட புறவயச் சூழ்நிலைகளினால் தனது அன்றாடங்களைத் தாண்டிப் படைப்பாளியாக பார்வை மாற்றுத்திறனாளிகளால் உருவாக முடியவில்லை. இந்நிலையைக் கடந்து படைப்பாளியாக மாறும் பார்வை மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கையும் குறைவே. குறிப்பாகக் கவிஞர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கான காரணம்? கவிஞனுக்குத் தன் அன்றாட இருப்பைக் கடந்த நிலை என்பது முதன்மையானது. அது இவர்களிடத்தில் சிக்கலுக்குரியது. இத்தகைய சூழலை மீறியே பார்வை மாற்றுத்திறனாளிகளால் படைப்பாளியாகவும் வாசகர்களாகவும் மாறவேண்டியுள்ளது. அப்படித் தனது அகப் படைப்பியல் சூழலைப் பாதிக்கும் இந்தப் புறவயக் கட்டமைப்புகளை மீறிய கவிதைப் படைப்பாளிகளின் பட்டியலை, அந்தகக்கவி என்னும் பார்வை மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்படும் இலக்கியப் பேரவையின் தொகுப்பீட்டில், பார்வை மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்படும் இணைய மின்னிதழான விரல் மொழியர் வெளியிட்டிருக்கின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பார்வையுள்ள கவிதைப் படைப்பாளிகள் உள்ள இந்தச் சமூகத்தில் விரல் மொழியரின் பட்டியலில் பதினோரு பார்வையற்ற கவிதைப் படைப்பாளிகள் மட்டுமே இருக்கின்றனர் என்பது பின்தங்கிய நிலையென்றாலும், இப்படிப் பார்வை மாற்றுத்திறனாளிகளின் படைப்புகளைத் தொகுத்துப் பட்டியலிடுதல் என்பது இதுவரை எழுதப்பட்ட எந்தத் தமிழ் இலக்கிய வரலாறுகளும் கூடச் செய்யாத ஒன்றே. இத்தகைய சூழலில் பயணித்துவரும்

பார்வையற்ற மாற்றுத்திறனாளியின் படைப்பியல் வாழ்க்கையில் வாசிப்பு அனுபவம் எப்படியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளும் நோக்கநிலையில் மேற்கொள்ளப்பட்ட கவிதைக் கருத்தாடலின் வழிப் பெறப்பட்ட தகவல்களும் அதன் மதிப்பீடுகளும் பின்வருமாறு.

பார்வையற்ற மாற்றுத்திறனாளிப் படைப்பாளிகள் மற்றும் வாசகர்களின் வாசிப்பு நிலையை அறிந்துகொள்வதற்காகப், பார்வையற்ற மாற்றுத்திறனாளி அல்லாத கவிஞர் ஞானக்கூத்தனின், பார்வை மாற்றுத்திறனாளிகள் குறித்து பேசாத பாலாஜிக்கு ஹரேராம் என்ற கவிதையினைப் பார்வை மாற்றுத்திறனாளிகளிடத்தில், பொதுவான கவிதை வாசிப்பு அனுபவம்

- பொது மற்றும் புதுக் கவிதை வாசிப்பு அனுபவம்
- நிறங்கள் மற்றும் காட்சிப் படிமங்களின் மீதான புரிதல் அனுபவம்

ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் முழுமையாகப் பார்வயை இழந்த பிறவி மற்றும் இடைநிலை மாற்றுத்திறனாளிகளிடத்தில் கேட்கப்பட்ட ஞானக்கூத்தனின் பாலாஜிக்கு ஹரேராம் என்ற,

“கேள்விப்பட்டேன் அவளைப் பற்றி

ஒருமுறை கூடப் பார்த்ததில்லை ஆனால்.

ரவிக்கை மட்டுமாம் மேலே, தாவணி

எதுவும் இராதாம். இடுப்பில்

முடிச்சுப் போட்ட ஈரிழைத்துண்டாம். நழுவாது. ஆனால் காற்றில் பறக்குமாம்.

வீட்டுக் கூடத்தில் ஏதோ வேலையாய் இருந்தவன் வாசலில் நிழலாடத் திரும்பிப் பார்த்தேன். இருந்தாள். பாலாஜிக்கு ஹரேராம் என்று பெயரிடப்பட்ட பிச்சைக்காரி, முன்னே சொன்ன வர்ணனைக்கேற்ப.

உடம்பு கோதுமை வர்ணம். பிச்சை அரிசியில் கிடந்த நெல்லை வாயிலிட்டுப் பல்லால் கொறித்தாள். அவளைக் காற்று சோதனை போட வெட்கித் திரும்பினேன். பழைய சேலை ஒன்றைத் தந்தேன். உடுத்தவில்லை. மடித்துக் கொண்டாள்.

மறுநாள் கேள்விப்பட்டேன். உள்ளூர்க் குதிரை வண்டிக்காரன், மண்டபத்தில் அவளிடம் அயோக்யனானான் என்று. மனதைக் கொஞ்சம் அரித்தது. நான் தந்த சேலையில் இருந்தாளா அவள் அப்போது?”

(ஞானக்கூத்தன் கவிதைகள் முழுத்தொகுப்பு, 2018 ப.எ.255)

இந்தக் கவிதையைப் புரிந்துகொள்வதிலும் உள்வாங்கிக் கொள்வதிலும் உங்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றதா? இல்லையா? ஏற்படுகின்றது என்றால், ஏன் ஏற்படுகின்றது?

இல்லையென்றால், ஏன் ஏற்படவில்லை? என்ற இந்தக் கேள்விகளின் மூலம் பெறப்பட்ட தகவல்கள்

குறிப்பு: இவ்வாய்விற்காகப் பதினோரு பார்வை மாற்றுத்திறனாளிகளிடத்தில் கவிதை, ஒலி மற்றும் எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டுப், பெறப்பட்ட தகவல்களில், மதிப்பீடு செய்யத் தேவையான கருத்துகள் மட்டும் தரப்பட்டிருக்கின்றன.

இடையிலிருந்து முழுப் பார்வையற்றவரான பார்த்திபன் என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையின் பொருளையோ உணர்வயோ புரிந்துகொள்வதில் எனக்கு எந்தவிதச் சிக்கலுமில்லை. ஏனென்றால், இந்தக் கவிதையில் இருக்கும் உணர்வையோ பொருளையோ புரிந்துகொள்வதற்குக் காட்சிகளின் முக்கியத்துவம் என்பது முதன்மையானது இல்லை. ஆனால், இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அவளின் நிறமாகிய கோதுமை நிறத்தை என்றோ பார்த்த ஞாபகம் இருக்கின்றதே தவிர அதைப்பற்றிய தெளிவு மனதில் இல்லை. கோதுமை நிறத்தை நான் மாநிறமாகவே இருக்குமென்று நம்புகின்றேன். கோதுமையின் உண்மை நிறம் தெரியவில்லை என்பதனால், அவளின் நிறத்தோடு கோதுமை நிறத்தை பொருத்திப்பார்ப்பதில் சிக்கல் இருக்கின்றது. காற்றில் ஆடிய அவளின் ஆடையின் நிலையை நான் ஆடைகள் அணிவதன்வழி உணர்ந்துகொள்கிறேன். இருந்தாலும் அந்நிலையில் அவளின் ஆடை அசைவில் காட்டப்பட்ட உடலின் அங்கத்தை என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அந்த அந்தரங்க உறுப்புகளைப் பார்த்தால் மனது சபலப்படும் என்பதை வாசிப்பு அனுபவத்தில்தான்உணர்ந்திருக்கிறேனேதவிரப்பார்த்து அனுபவித்ததில்லை. அந்தரங்க விசயங்களைப் பற்றி கேட்கும்போது சபலம் எற்படும் என்பது தெரியும், பார்த்தாலும் வரும் என்பதை வாசிப்பு வழியாக அறிந்துகொண்டதன்வழித் தொடர்புபடுத்திக் கொள்கின்றேன். இந்த கவிதையில் வரும் கோதுமை நிறத்தையும் ஆடையின் அசை நிலையையும் அவள் கொறித்துக் கொண்டிருந்த காட்சியினையும் நிழல் ஆடியதன்வழி அவளின் வருகையைப் புரிந்து கொண்டதையும் ஏற்கனவே வாசிப்பு அனுபவத்தில் மனதிற்குள் சேமித்து வைத்திருந்த தகவலின் மூலம் தொடர்புபடுத்திக் கொள்ள முடிகிறது. இதுவே உணர்வுகளுக்கு முக்கியத்துவமில்லாத முழுமையான காட்சிசார் கவிதையாக இந்தக் கவிதை இருந்திருக்குமானால் உணர்வையும் பொருளையும் கடந்து காட்சிக்கே நினைவுகள் முக்கியமளித்திருக்கும். இந்தக் கவிதையில் காட்சிக்குக் கவனம் கொடுக்கவில்லை என்றாலும் முழுமையாகக் கவிதையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படியொரு வாய்ப்பு இந்த கவிதை அளித்ததினாலும் அதற்கு நான் பழக்கப்பட்டிருந்ததினாலும் இதில் வரும் காட்சிகளை நான் பார்க்காமல் இருந்திருந்தாலும்கூட கவிதையைப் புரிந்துகொள்ள முடியும்.

1. தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு:
2. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.
3. புதுக்கவிதைகள் குறித்த அடிப்படைப் புரிதலோ, தொடர் வாசிப்போ இல்லை.
4. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
5. புதுக்கவிதைகள் குறித்த தொடர் வாசிப்பு இல்லாததனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள இந்தக் கவிதை பேசும் கருத்தினைச் சொல்லும் தன்மை குறைவே.
6. கவிதையில் வரும் நிறங்களை, நிறங்கள் சுட்டும் பொருள்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முழுமையாக உணர முடியவில்லை.

கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக்கொள்ளுதலுக்கேற்ற அளவில் மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மேலதிக அளவிற்குக்கூட உணர முடியவில்லை.

இடையிலிருந்து முழுப் பார்வையற்றவரான ரம்யா என்ற தகவலாளியின் கருத்தாடல்

பொதுவாகக் கவிதை வாசிப்பு அனுபவம் இருப்பதால் இந்தக் கவிதையின் கருத்தை உள்வாங்கிக்கொள்ள முடியாத அளவிற்குச் சிக்கல் எதுவுமில்லை. இதில் சிக்கலாக நான் பார்ப்பது நிறத்தை மட்டுமே. பதினெட்டு வயதில் பார்வையை இழந்த இடைநிலை பார்வையற்றவளாக இருந்தாலும்கூட எனக்கு இப்போது பார்வை இருந்தபோது நான் பார்த்த நிறங்கள் எதுவும் முழுமையாக நினைவுக்கு இல்லை என்பதால், அந்தப் பெண்ணின் உடல் நிறமாகிய கோதுமை நிறத்தினை நினைவுகள் வழியாக எனக்குத் தொடர்புபடுத்திகொள்ள முடியவில்லை.

1. தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு
2. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.
3. புதுக்கவிதைகள் குறித்த அடிப்படைப் புரிதலும் வாசிப்பும் ஓரளவிற்கே உள்ளன.
4. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
5. புதுக்கவிதைகள் குறித்து ஓரளவிற்கு வாசிப்பு அனுபவம் இருப்பதனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள கருத்தினைச்

சொல்லும் தன்மை ஓரளவிற்கு இருக்கின்றது.

6. கவிதையில் வரும் நிறங்கள் சுட்டும் பொருள்களை உணர முடிகிறது. ஆனால் ஒட்டுமொத்த நிறங்களின் வண்ணங்களையும் மறந்ததினால் புரிந்துகொள்ள மட்டும் முடிகிறது. முழுமையாக உணர முடியவில்லை.

கவிதையில் வரும் காட்சிப் படிமங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ளவும் முடிகிறது. உணரவும் முடிகிறது.

பிறந்ததிலிருந்தே முழு பார்வையற்றவரான இளங்கோதை என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையின் கருத்து எனக்குத் தெளிவாக புரிந்தது. பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவளாக இருந்தாலும், இந்த கவிதையில் உள்ள கருத்துகளைப் புரிந்துகொள்ள முடிந்தது ஆனால் உணர முடியவில்லை. இதை இரண்டு நிலையில் வெளிப்படுத்த நினைக்கின்றேன்.

அந்தப் பிச்சைக்காரியின் நிறத்திற்குச் சொல்லப்பட்ட கோதுமை நிறத்தின் பொருளைப் புரிந்துகொள்ள முடிந்தது ஆனால் உணர முடியவில்லை.

நிழல் ஆடியதில் அவளின் வருகையை உணர்ந்துகொண்டேன் என்பதில் நிழல் ஆடுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது ஆனால் நிழல் எப்படி ஆடும் என்பதையும் அதன் அசைவு நிலையையும் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து எந்தவிதக் கவிதைகளையும் வாசிக்கும் அனுபவம் இல்லை.

2. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு ஓரளவிற்குப் பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

3. நிறங்கள் சுட்டும் பொருள்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

4. நிறங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

5. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக் கொள்ளுதற்கேற்ற அளவில் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மேலதிக அளவிற்குக்கூட முழுமையாய் உணர முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான கண்மணி என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையின் பொருளைப் புரிந்துகொள்வதில் எனக்கு எந்தவிதச் சிக்கலும் இல்லை. ஆனால் இதில் வரும் நிறத்தைப் புரிந்துகொள்வதிலும், பாத்திரங்களின் அசைவுகளைப் புரிந்துகொள்வதிலும் சிக்கல் இருக்கின்றது. அந்தப் பிச்சைக்காரியின் நிறத்திற்கு ஒப்புமைபடுத்தப்படும் கோதுமை நிறத்தை நான் வெளிர் மஞ்சள் நிறமென்றே புரிந்துவைத்திருக்கின்றேன்.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து எந்தவிதக் கவிதைகளையும் வாசிக்கும் அனுபவம் இல்லை.

2. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு ஓரளவிற்குப் பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

3. நிறங்கள் சுட்டும் பொருள்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

4. நிறங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

5. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக் கொள்ளுதற்கேற்ற அளவில் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மேலதிக அளவிற்குக்கூட முழுமையாய் உணர முடியவில்லை.

இடையிலிருந்து முழு பார்வையற்றவரான சுபா என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையின் பொருளை புரிந்துகொள்வதில் எனக்கு எந்தவிதச் சிக்கலும் இல்லை. ஆனால் இதில் வரும் நிறத்தைப் புரிந்துகொள்வதிலும், பாத்திரங்களின் அசைவுகளைப் புரிந்துகொள்வதிலும் சிக்கல் இருக்கின்றது. அந்தப் பிச்சைக்காரியின் நிறம் கோதுமை என்பதால் அவளை நான் ஒரு வடநாட்டு பெண்ணென்று நினைக்கின்றேன். இந்தக் கோதுமை நிறம் மஞ்சள் நிறத்திலிருந்து கொஞ்சம் வித்யாசமாக இருக்குமென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். அந்தப் பிச்சைக்காரி முன்னால் கேள்விப்பட்ட அடையாளங்களோடு இருந்தாளாம் என்பது தொடக்கத்தில் புரியவில்லை. மீண்டும் மீண்டும் இந்தக் கவிதையைக் கேட்கும் போதுதான் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புரியத்தொடங்கியது.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு:

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.

2. புதுக் கவிதைகள் குறித்த அடிப்படைப் புரிதலோ, தொடர் வாசிப்போ இல்லை.

3. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக் கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

4. புதுக் கவிதைகள் குறித்த தொடர் வாசிப்பு இல்லாததனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள இந்தக் கவிதை பேசும் கருத்தினைச் சொல்லும் தன்மை குறைவே.

5. கவிதையில் வரும் நிறங்களை, நிறங்கள் சுட்டும் பொருள்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முழுமையாக உணர முடியவில்லை.

6. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக் கொள்ளுதலுக்கேற்ற அளவில் மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மேலதிக அளவிற்கு உணர முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான தாரணி என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையின் பொருளைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இதில் வரும் நிழல் ஆடுதல், அரிசியைக் கொறித்துக் கொண்டிருந்த காட்சி ஆகியவற்றை முன் அனுபவத்தின் வழியாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் இந்தக் கவிதையில் வரும் பொருள்களின் மீதான நிறங்களை எப்படிப் புரிந்துகொள்வதென்று தெரியவில்லை. ஏனென்றால் அடிப்படையில் எந்த நிறங்களைப் பற்றிய அறிவும் எனக்கு இல்லை. நிறங்களின் சொல்வழி உண்டாகின்ற பொருள்களைத் தொடர்புபடுத்தியே அந்தந்த நிறங்களை புரிந்துகொள்கின்றேன்.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து எந்தவிதக் கவிதைகளையும் வாசிக்கும் அனுபவம் இல்லை.

2. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைச் தொடர்புபடுத்திக் கொண்டு ஓரளவிற்குப் பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

3. நிறங்கள் சுட்டும் பொருள்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

4. நிறங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய்

உணர முடியவில்லை.

5. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது உணரவும் முடிகிறது.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான பாண்டியராஜன் என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையை இரண்டு மூன்று முறைகளுக்கு மேல் வாசித்ததில் எனக்கு எந்தவிதப் புரிதலின்மையும் இல்லை. ஏனென்றால் நான் முழுமையாகப் பிறந்ததிலிருந்தே பார்வையற்றவனாக இருந்தாலும்கூட உருவங்களை ஓரளவிற்கு என்னால் பார்த்துப் புரிந்துகொள்ள முடியும். இதில் அவளது நிறத்தைக் கோதுமையின் நிறம் என்று சொல்லியிருப்பதை என்னால் இந்த நிறமாகத்தான் இருக்குமென்று சொல்லிவிட முடியவில்லை. கோதுமை நிறத்தினை நான் மாநிறமென்றே புரிந்துகொள்கின்றேன். ஏனென்றால் எனக்கு முதன்மையான மூல நிறங்களைத் தவிர வேறு எந்த நிறங்களும் தெரியாது. தேவைப்படும் பட்சத்தில் அதன் தன்மையைக் கேட்டுத் தெரிந்துகொள்கின்றேன்.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு:

1. தொடர்ந்து எந்தவிதக் கவிதைகளையும் வாசிக்கும் அனுபவம் இல்லை.

2. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

3. நிறங்கள் சுட்டும் பொருள்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஓரளவிற்கு உணர முடிகிறது.

4. நிறங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

5. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளவும் முடிகிறது அதே அளவிற்கு உணர்ந்து கொள்ளவும் முடிகிறது.

பிறந்ததிலிருந்தே முழு பார்வையற்றவரான பாலகணேசன் என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதையைக் கேட்டேன். தெளிவாகவே புரிகிறது. இதில் சிக்கலென்று நான் பார்ப்பது, இதில்வரும் அந்தப் பிச்சைக்காரப் பெண்ணைப் பற்றிய வர்ணனைகளே.

அது என்ன கோதுமை வண்ணம்? என்ற கேள்வி முழுப் பார்வையற்றவர்களுக்கு இருக்கத்தான் செய்யும். எனக்கும் அந்தக் கோதுமை நிறத்தின் மீதான தெளிவின்மை இருக்கின்றது. இதில் கோதுமை என்பது நிறம்தானே தவிர அந்தப் பிச்சைக்காரியின் மெலிவைப் பற்றியோ, இருப்புநிலையைப் பற்றியோ கோதுமை நிறமானது எதையும் உணர்த்தவில்லை. இந்தக் கவிதையில் வரும் பிச்சைக்காரியின் உடையின் நிலை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இடுப்பில் ஒரு துண்டு கட்டியிருக்கின்றாள், அது அவிழ்ந்துவிடாது ஆனால் காற்றில் பறக்கும் என்ற இந்தக் காட்சியைப் புரிந்துகொள்வதற்குச் சிக்கல் எதுவுமில்லை. என்னைப் பொருத்தவரையில் கோதுமை நிறத்தைத்தவிர இந்தக் கவிதையைப் புரிந்துகொள்ள முடியாமல் போவதற்கு வேறு எந்த விசியமும் இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.
2. புதுக் கவிதைகள் குறித்த அடிப்படைப் புரிதலோ, தொடர் வாசிப்போ இல்லை.
3. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக்கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
4. புதுக் கவிதைகள் குறித்த தொடர் வாசிப்பு இல்லாததனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள இந்தக் கவிதை பேசும் கருத்தினைச் சொல்லும் தன்மை இல்லை.
5. கவிதையில் வரும் நிறங்களை, நிறங்கள் சுட்டும் பொருள்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முழுமையாக உணர முடியவில்லை.
6. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக் கொள்ளுதலுக்கேற்ற அளவில் மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மேலதிக அளவிற்குக்கூட உணர முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான பொன் சக்திவேல் என்ற தகவலாளியின் கருத்தாடல்:

இந்தக் கவிதையைப் புரிந்துகொள்வதிலும் படிப்பதிலும் எனக்கிருக்கும் வாசிப்பு அனுபவத்தின்படி எந்தவிதச் சிக்கலுமில்லை. மிகவும் எளிமையான கவிதையாகவே இருக்கின்றது. ஆனாலும், ஒரு முழுப் பிறவிப் பார்வை மாற்றுத்திறனாளி என்பதால் அடிப்படையில் காட்சிகளை உள்வாங்கிக் கொள்வதில் சிக்கல் இருக்கின்றது. ஏனென்றால் அடிப்படையில் பார்வை மாற்றுத்திறனாளியால் பார்த்தலின் மூலம்

நேரடியாகக்காட்சிகளைஉள்வாங்கிக்கொள்ளமுடியாது.எனவேஎனக்குஅனுபவப்பட்ட காட்சிகளை இதனோடு பொருத்திப் பார்த்துக் கொள்கின்றேன். பெண்களோடு பழகியிருப்பதாலும் பெண்களைப் பற்றிய புரிதல் இருப்பதாலும் அவளின் அருகில் இருந்திருப்பதாலும் அவளின் உருவத்தோடு உணர்வு ரீதியான தொடர்பு இருப்பதாலும் இந்தக் கவிதையில் வரும் உருவத்தையோ உடைகளையோ அசைவுகளையோ அந்த அனுபவத்தின் வழியாக தொடர்புபடுத்தி புரிந்துகொள்ள முடிகிறது. இந்த கவிதையை வாசிக்கும்போது எனக்கிருந்த ஒரே குறிப்பிட வேண்டிய சிக்கலாக நான் கருதுவது அவளின் கோதுமை நிறத்தையே. ஏனென்றால், கோதுமையின் உண்மை நிறத்தை நான் பார்த்ததேயில்லை. எனக்கிருக்கும் வாசிப்பு அனுபவத்தை வைத்தே கோதுமை நிறத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றேன். குறிப்பிடுவதற்காக சொல்லப்பட்ட சிக்கல்களை கடந்து இந்த கவிதையை முழுமையாய் நான் புரிந்துகொள்வதற்கு இதில் பின்புலமாக இருக்கும் எந்தக் காட்சியும் எனக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தேவைப்படவில்லை.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.
2. புதுக்கவிதைகள் குறித்த புரிதலோ, தொடர் வாசிப்போ இல்லை.
3. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளை தொடர்புபடுத்திக்கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
4. புதுக்கவிதைகள் குறித்த தொடர் வாசிப்பு இல்லாததனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள இந்தக் கவிதை பேசும் கருத்தினைச் சொல்லும் தன்மை இல்லை.
5. கவிதையில் வரும் நிறங்களை, நிறங்கள் சுட்டும் பொருள்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முழுமையாக உணர முடியவில்லை.
6. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைக் கவிதையின் பொருளினை அர்த்தப்படுத்திக் கொள்ளுதலுக்கேற்ற அளவில் மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மேலதிக அளவிற்குக்கூட உணர முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான மோசஸ் என்ற தகவலாளியின் கருத்தாடல்

இந்தக் கவிதை எனக்குப் புரியவில்லை. புதுக்கவிதை வாசிப்பு அனுபவம் எனக்கு குறைவுதான். மேலோட்டமாய் இந்தக் கவிதையைக் கேட்டதில் எல்லா பிறவிப் பார்வையற்றவர்களைப் போலவே நிறம், காட்சி ஆகியவற்றைப் புரிந்துகொள்வதில்

எனக்கும் சிக்கல் இருக்கின்றது.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு:

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் குறைவு.

2. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக் கூடப் பொருள் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான விஜயகுமார் ஆசிரியரின் தகவலாளியின் கருத்தாடல்

நான் பிறந்ததிலிருந்தே முழுமையான பார்வையற்றவனாக இருந்தாலும்கூட, இந்தக் கவிதையைப் புரிந்துகொள்வதில் எனக்கு எந்தவிதச் சிக்கலும் ஏற்படவில்லை. ஏனென்றால் அடிப்படையில் நானொரு தீவிர வாசகன் என்பதால், பொருள், கருத்து, கருபொருள் ஆகியவற்றின் மீதான எனது முன் அனுபவத்தை எல்லா நிலைகளிலும் பொருத்திப்பார்க்க முடிவது போல, இந்தக் கவிதையின் மீதும் அதே செயல் நிகழ்கிறது. நிறங்களை நான் பார்த்ததில்லை என்பதால் கோதுமை நிறம் அடிப்படையில் எனக்கு தெரியாதுதான். ஆனாலும் அந்நிறத்தின் மீதான தெளிவின்மையை எனது வாசிப்பு அனுபவத்திலிருந்து பூர்த்திசெய்து கொள்கின்றேன். பத்து ஆண்டுகளுக்கு மேலாக புதுக்கவிதைகளின் மீதும் நவீனக் கவிதைகளின் மீதும் ஆழ்ந்த வாசிப்பு அனுபவம் இருப்பதால் இந்தக் கவிதையை எல்லா நிலைகளிலும் என்னால் தொடர்புபடுத்திக் கொண்டு பொருள் புரிந்துகொள்ள முடிகிறது.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் உள்ளது.
2. புதுக்கவிதைகள் குறித்த புரிதலும் தொடர் வாசிப்பும் உள்ளது.
3. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக் கொண்டு பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
4. புதுக்கவிதைகள் குறித்த தொடர் வாசிப்பு இருப்பதனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள கவிதை பேசும் கருத்தினைச் சொல்லும் தன்மை உள்ளது.
5. கவிதையில் வரும் நிறங்களை, நிறங்கள் சுட்டும் பொருள்களை ஓரளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறது. ஓரளவிற்கு உணர்ந்து கொள்ளவும் முடிகிறது.

6. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், முழுமையாக உணர்ந்து கொள்ள முடியவில்லை.

பிறந்ததிலிருந்தே முழுப் பார்வையற்றவரான விஜயகுமார் என்ற தகவலாளியின் கருத்தாடல்

புதுக்கவிதைகளின் மீதில் பெரிய அனுபவம் எனக்கு இல்லை. பொதுவாக எனக்கிருக்கும் வாசிப்பு அனுபவத்தை வைத்து இந்தக் கவிதையைப் புரிந்துகொண்டதில், காட்சிகள் குறித்த புரிதலின்மை எனக்கு இல்லை. இந்தக் கவிதையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்குத் திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கவிதை மீதான வாசிப்புக் குறைபாடு இருப்பதனால் முழுமையாகவே இந்தக் கவிதையின் காட்சி, பொருள், உட்கருத்து ஆகியவற்றைப் புரிந்துகொள்வதில் சிக்கல் இருக்கத்தான் செய்கிறது. நவீன கவிதைகளில் சில கவிதைகளை நேரடியாக பொருள் புரிந்துகொள்ள முடியாது என்பதால் வேறு ஏதாவது நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தியே பொருளைப் புரிந்துகொள்ள முடியும் என்பதால், இந்தக் கவிதையையும் ஒரே கோர்வையாகப் புரிந்துகொள்வதற்கு மேலதிக முறைகள் தேவைப்படுகிறது என்பதே எனது பொது வாசிப்பின் மூலம் புரிந்து கொண்டிருக்கின்றேன்.

தகவலாளியின் கருத்தாடல் மதிப்பீடு

1. தொடர்ந்து கவிதை வாசிக்கும் அனுபவம் குறைவு.
2. புதுக்கவிதைகள் குறித்த அடிப்படைப் புரிதலும் வாசிப்பும் ஓரளவிற்கே உள்ளது.
3. கவிதையில் இருக்கும் அடுத்தடுத்த வரிகளைத் தொடர்புபடுத்திக் கொண்டு ஓரளவிற்குப் பொருள் உணர்ந்துகொள்ள முடிகிறது.
4. புதுக்கவிதைகள் குறித்து ஓரளவிற்கு வாசிப்பு அனுபவம் இருப்பதனால் தொடக்கத்தில் சுயமாய் யோசித்து வரிகளுக்கு அப்பால் உள்ள கருத்தினைச் சொல்லும் தன்மை ஓரளவிற்கு இருக்கின்றது.
5. கவிதையில் வரும் காட்சிப் படிமங்களை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளவும் முடிகிறது அதே அளவிற்கு உணர்ந்து கொள்ளவும் முடிகிறது.
6. நிறங்களை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாய் உணர முடியவில்லை.

மேற்கண்ட தகவலாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுக் கலந்துரையாடலிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்டுப், பின் அந்த மதிப்பீடுகளைச்

சூழல், வினை, காரணம் என்ற அளவீடுகளோடு பொருத்திப் பார்க்கப்பட்டதிலிருந்து கிடைக்கப்பெற்ற மதிப்பீடுகள்;

1. முழு அல்லது இடைநிலைப் பார்வைக் குறைபாடு என்பது, படைப்பாளியாய் மற்றும் வாசகராய் மாறுவதற்குத் தடையில்லை. இந்த மதீப்பீட்டின் மூலம் ஆய்வின் கருதுகோளானது மெய்ப்பிக்கப்படுகிறது.

2. புதுக்கவிதைகளைப் புரிந்துகொள்வதில் பெரும்பாலும் எந்தவிதச் சிக்கலும் இல்லையென்றாலும், புதுக்கவிதைகள் மீதான வாசிப்புப் போதாமை இருக்கின்றது.

3. நிறங்கள், உருவங்கள் ஆகியவற்றை முன்பே உள்ள அனுபவ அனுமானங்களின் வழியாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

4. விஜயகுமார் ஆசிரியர் மற்றும் பார்த்திபன் என்பவர்களைத் தவிர, வேறு யாருக்கும் கவிதையின் உண்மைச் சூழலை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

5. எல்லாத் தகவலாளிகளுக்கும் மேலோட்டப் புரிதல் திறன் இருக்கின்றது.

6. மோசஸ் என்ற தகவலாளிக்கு கவிதை வாசிப்பு மற்றும் எழுதும் அனுபவம் இருந்தும், இந்தக் கவிதையை புரிந்துகொள்ளவே முடியவில்லை.

7. பார்த்திபன், சுபா, ரம்யா, விஜயகுமார் ஆசிரியர் ஆகிய தகவலாளிகள் கவிதையில் வரும் நிறம், உருவம், பெயர் ஆகியவற்றை வைத்துக் குறியீட்டு ரீதியில் அடுத்தகட்டப் பொருள் புரிதலை யூகிக்க முடிகின்றது.

8. எல்லோருக்கும் அடிப்படையில் வாசிப்பின் மீது ஆர்வம் இருக்கின்றது.

9. எல்லோரிடத்திலும் கவிதை மீதான கருத்துகள் சரி, தவறு என்பதைக் கடந்து வாழ்வியல் அனுபவங்கள் அதிகமே இருக்கின்றது.

10. தற்போதைய நவீனத் தொழில் நுட்பத்தைப், பார்வை மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தும் படியாகக் கைப்பேசி மற்றும் கணினித் தொழில்நுட்பத்தின் அணுகியலானது இருக்கின்றது.

முடிவுரை

பார்வை மாற்றுத்திறனாளிகளுள் படைப்பாளர்கள் குறைவுபட்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் அவர்களிடத்தில் காட்சிசார் மற்றும் அறிதல்சார் படிமக் குறைபாடு காணப்படுவதே. ஒரு பார்வை மாற்றுத்திறனாளி படைப்பாளியாக மாறுவதில் உள்ள

அடிப்படை சிக்கல், சூழலின் காட்சி அசைவுகளை சுயமாய் உள்வாங்கிக்கொள்ள முடியாததே. குறிப்பாக கவிஞர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கான காரணம்? கவிஞனுக்குத் தன் அன்றாட இருப்பைக் கடந்த நிலை என்பது முதன்மையானது. அது இவர்களிடத்தில் சிக்கலுக்குரியது. ஒரு படைப்பாளிக்கு வாசிப்பு இன்றியமையாதது. ஆனால் அடிப்படையில் எந்தவொரு பார்வை மாற்றுத்திறனாளியும் தொடர்நிலை வாசகர்கள் இல்லை என்பது படைப்பியல்சார் அனுமானமாகும்.

பார்வை மாற்றுத்திறனாளிகளுள் பிறவியிலேயே பார்வையை இழந்தவர்கள், இடையில் பார்வையை இழந்தவர்கள் என்று அடிப்படையில் இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். என்பதால், இவர்களுக்கிடையேயான புரிதல் பலவிதங்களில் வேறுபட்டது என்பதால் தன்னைச் சுற்றி நிகழ்கின்ற சூழல் அசைவுகளை இருவரும் புரிந்துகொள்ளும் விதமும் ஒன்றொடொன்று வேறுபட்டதே. இந்த முறையில் படைப்பு, படைப்பாளி இந்த இரண்டையும் தீர்மானிக்கும் சூழல் ஆகியவை சிக்கலுக்குள்ளாகின்றது என்பது புரிதல்.

பிரெயில் முறை வாசிப்புப் பழக்கமானது குறைந்துவிட்டதாலும், ஒலி வடிவிலான நூல்கள் மற்றும் திரைப் படிப்பான் வழியாக வாசிப்பானது பள்ளி வயதிலிருந்தே அதிகரித்து விட்டதாலும் இவர்களிடம், எழுத்துப் பிழையானது சரி செய்யப்படாத நிலை பள்ளி வயதிலிருந்தே தொடர்ந்து வருகின்றது. முற்போக்கு நிலையில் பெரிதாகப் பார்க்கப்படவில்லை என்றாலும், படைப்பியல் சூழலுக்கு இந்நிலை தொய்வானதே. முழு அல்லது இடைநிலைப் பார்வைக் குறைபாட்டு படைப்பாளி உருவாக்கத்திற்குத் தடையில்லை என்றாலும், வாசிப்பு போதாமையானது ஒரு பெரும் தடைதான். இந்த நிலை மாற,

- அன்றாட வாழ்வில் பிரையில் முறையில் எழுதவும் படிக்கவும் தொடங்குவது.
- திரை படிப்பான் வழியிலான கற்கும் முறையில், எழுத்து, சொல் ஆகியவற்றிற்கு முதன்மையளிப்பது.
- ஒலிக்கோப்புகள் வடிவில் கற்றலில் உச்சரிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது.
- அன்றாட நடவடிக்கைகளில் தொடர் வாசிப்புப் பழக்கத்தினை மேற்கொள்வது.
- அதிகம் கேட்டலைத் தாண்டி நிறைய வாசிப்பது.
- மரபிலக்கண மற்றும் நவீன இலக்கண மரபுகளை கேட்டல், வாசித்தல், கலந்துரையாடுதல் மூலமாக புதிப்பித்துக்கொண்டே இருத்தல்.
- எதையாவது நாள்தோறும் எழுதிக்கொண்டே இருத்தல்.
- தொடர்ந்து நேர்மறை மற்றும் எதிர்மறை அனுபவங்களைச் சேகரித்துக் கொண்டே

இருத்தல்.

❖ சின்னச்சின்ன எழுதுதல் மற்றும் வாசிப்பு சார்ந்த பிரெயில் விளையாட்டுகளை விளையாடுதல்.

என்ற நடவடிக்கைகள் அன்றாட வாழ்வில் முறைப்படுமானால், புதுக்கவிதை படைப்பார்வமிருக்கும் எல்லாப் பார்வை மாற்றுத்திறனாளிகளாலும் கவிதைப் படைப்பாளிகளாகவும், வாசக மற்றும் விமர்சகர்களாகவும் மாற்றம்பெற முடியும்.

துணைநூல்கள்

1. **ஞானக்கூத்தன் கவிதைகள் (முழுத் தொகுப்பு),** காலச்சுவடு பதிப்பகம், பதிப்பாசிரியர் திவாகர் ரங்கநாதன், முதல் பதிப்பு-2019

2. ரமேஷ் மு, காட்சியதிகாரம் கட்டுரைத் தொகுப்பு, புதுப்புனல் பதிப்பகம், முதல் பதிப்பு-2008

3. இலக்கியம் பார்வையற்றவருக்கு எதிரானதா?, கென்னத் ஜெர்னிகன் உரை, ஆங்கிலத்திலிருந்து தமிழில்: ப. பூபதி &இரா. தமிழ்ச்செல்வன்

References

1. Gnanakuthan kavithaigal muzhuthoguppu, Kaalachuvadu pathippagam, Pathippasiriyar thivagar, ranganadhan, First edition 2019

2. Ramesh M, Katchiyathigaram Katturai thoguppu, Puthuppunal pathippagam, First edition 2008

3. Ilakkiyam parvaiyatravarukku ethiranatha?, Kenneth Jernicon speech, From English to Tamil: Bhupathi P& Tamilselvan R

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

மகாலிங்கம்.மு, ராம்ராஜ். லி, “கவிதையை அறிதலில் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சவால்கள் [ஞானக்கூத்தனின் பாலாஜிக்கு ஹரேராம் என்ற கவிதையை முன்வைத்து] ” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜூலை 2025, பக். 18-35

Cite this Article in English

Mahalingam.M, Ramraj.L , “Challenges faced by the visually impaired in acknowledging poetry (Based on Gnana Koothan's "Balajikku hareram" poem) ” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 18-35

சமண பௌத்த மறுப்பில் தேவார மூவரின் உத்திகள்

Samana Buddha Maruppil Thevara Movarin Uththigal

சாந்தி மகாலிங்கசிவம்*, கோகுல். இரா*

*தமிழ்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641020

Shanthy Mahalingasivam*, Gokul.R*

*Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore 64 1020

DOI: 10.5281/zenodo.16400566

Abstract

India is the land of philosophies. History shows that there are generations who argued for and against one others philosophical principles. There are lots of Literary references about this. Tholkaappiyam, one of the foremost text in Tamil also discusses about these philosophical refutations. During the domination of Jainism and Buddhism in Tamil religious and philosophical activities, Devara Moovar took a stand against them and establish Shaivism. Their Verses in Devaram promotes their refutation of Jainism and Buddhism to the people of Tamilnadu. Because of their constant travel and conversation, Jainism and Buddhism gradually began to decline from Tamil minds. Their verses revealed that they have tried many techniques to refuse and criticize their philosophy.

ஆய்வுச் சுருக்கம்

இந்திய மண்ணில் அறிவின் துணையுடன் பல தத்துவங்கள் காணப்படுகின்றன. இந்தத் தத்துவக் கொள்கைகளை ஏற்றலும் மறுத்தலும் என வாதிட்ட மரபினரை வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். காலம் காலமாக ஒவ்வொரு தத்துவத்தையும் தருக்கித்த தருக்கவாதிகள் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. மிகப் பழமையான மொழியான தமிழ்மொழியில் கிடைத்த முதல் நூலான தொல்காப்பியத்திலும் மறுத்து உரைத்தல் பற்றிப் பேசப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் சமண பௌத்த மதங்கள் தத்துவாத்த ரீதியில் முன்னணியில் இருந்த காலகட்டத்தில்,

அவர்களுக்கு எதிராகக் களம் இறங்கி சைவத்தையும் தமிழையும் நிலைநாட்டத் தேவார முதலிகள் தர்க்கவாதத்தினைக் கையில் எடுத்தனர். ஆனால் இவர்கள் தமது மறுப்பினைப் பாடல்கள் வடிவில் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தனர். இதன் காரணமாகவும் சமண, பௌத்தம் இந்த மண்ணிலிருந்தும் மக்கள் மனதில் இருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக வீழத் தொடங்கியது. தேவார முதலிகள் பாடல்கள் மூலம் சமண, பௌத்தரை விமர்சித்துப் பாடுவதற்கு அவர்கள் பல உத்திகளைப் பயன்படுத்தி உள்ளனர் என்பது தெரிய வருகிறது.

Keywords: Tholkappiyam, Devara moovar, Jainism, Buddhism, philosophical refutations, techniques to refuse and criticize, fasting

முன்னுரை

தமிழில் முதல் கிடைத்த இலக்கியமாகத் தொல்காப்பியம் இருப்பது மாத்திரமன்றி, உலக இலக்கியத்திலும் முதல் இலக்கியமாக இதைக் கொள்ளலாம் என்கிறார் எழுத்தாளர் ஜெயமோகன். இப்படிப்பட்ட தொல்காப்பியத்தில் ‘பொருள் அதிகாரத்தில்’ இருக்கும் மரபியல் என்ற தலைப்பில் நூலின் உத்திகள் என்ற பகுதி உள்ளது. அதாவது நூல் ஒன்றினை எழுதும் போது கடைபிடிக்க வேண்டிய முறைகள் பற்றிய விளக்கமாகும். நூல் எழுதுவதற்கு தொல்காப்பியர் பயன்படுத்திய உத்திகளைப் போலவே ஒவ்வோர் இலக்கியத்திலும் ஏதோ ஒரு வடிவத்தில் உத்தி மறைந்திருக்கிறது. தேவாரத்திலும் இவ்வுத்திகள் காணப்படுகின்றன. தேவாரமுதலிகள் தம் பாடலில் பயன்படுத்திய உத்திகளுக்கும் தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள உத்திகளுக்கும் இடையிலான தொடர்ச்சியினையும் அதன் பொருத்தப்பாட்டினையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

தேவாரத்தில் சமண பௌத்த எதிர்ப்பு

பக்தி இயக்கத்தின் தோற்றுவாய் எனச் சொல்லப்படும் திருஞானசம்பந்தர் கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். “இவரது பிறப்பு சமண, பௌத்தத்தை அழிக்கவே” (கவிஞர் வ. த.இராமசுப்பிரமணியம் (உரை), பெரியபுராணம் தொகுதி 3, ப.61) நிகழ்ந்தது எனச் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களில் வரும் பத்தாவது பாடல்தோறும் சமண பௌத்தரை மிகக் கடுமையாகச் சாடியுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறே திருநாவுக்கரசரும் சுந்தரரும் சமண பௌத்த எதிர்ப்புப் பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உத்திகளும் தேவார முதலிகளும்

தேவார முதலிகளது சமண, பௌத்த எதிர்ப்புப் பாடல்களில் தொல்காப்பியர் கூறும் உத்திகளும் தொல்காப்பியரால் சொல்லப்படாத உத்திகளும் உள்ளமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் தொல்காப்பியரது நுதலியது அறிதல், அதிகார வகை, வகுத்து மெய்நிறுத்தல், மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல், தன்கோள் கூறல், ஆணை கூறல், பிறன்கோள் கூறல், பொருள் இடையிடுதல், தான் குறியிடுதல், மறுதலை சிதைத்துத் தன் துணிவு உரைத்தல் போன்ற உத்திகளைத் தேவார முதலிகள் எடுத்தாண்டுள்ளனர்.

தொல்காப்பியத்தின் சொல்லப்படாத உத்திகளாக அநீதியை எதிர்த்தல், அடைமொழி மூலம் இகழுதல், அதிகாரத்தில் உள்ளவரை எதிர்த்தல், வாதம் மூலம் எதிர்த்தல், உண்ணா நோன்பு கைக்கொண்டு எண்ணியதை முடித்தல், மொழியை ஆயுதமாகப் பயன்படுத்தியமை, தலச்செலவுகள் போன்ற உத்திகளையும் தேவார முதலிகள் கையாண்டுள்ளனர்.

தொல்காப்பிய உத்தி - ஆணை கூறல்

தான் கூற வந்த செய்தியை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதமாகக் கூறும் உத்தியே 'ஆணை கூறல்' ஆகும். 'ஆணை கூறல்' என்ற தொல்காப்பியரின் உத்தி இவ்வடிப்படையில் உற்று நோக்கத்தக்கதாகும். இதற்கு இளம்பூரணார், ஒரு பொருளைக் கூறும் வழி ஏதுவினாற் கூறலன்றித் தன்னானையாற் கூறல் (இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.576) என்றும், தமிழண்ணல், தானே ஒரு கருத்தை ஆணையிட்டுக் கூறல் (தமிழண்ணல் (உரை), தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், ப. 555) என்றும் உரை கண்டுள்ளனர்.

திருஞானசம்பந்தர் தான் பாடிய பதிகம் முழுவதையும் ஓதினால் இம்மை, மறுமைப் பேறுகள் கிட்டும் எனக் கடைக்காப்பில் ஆணையிட்டுக் கூறியுள்ளார். "அன்றைய சமயச் சூழலில், கேட்பவருக்கு ஆணையிட்டுக் கூறுவதன் மூலம் தன்னம்பிக்கையை ஊட்டுகிறார். அதுமட்டுமன்றி அருளாளர்கள் வேறு யாரும் கடைக்காப்பில் ஆணையிட்டுப் பாடவில்லை" (முனைவர் இரா.கோகுல் (தொ.), பண்பாட்டு வரலாறு பேசும் கடைக்காப்பு, ப.15) என்கிறார் முனைவர்.சு. வேங்கடராமன். அவரது வாழ்க்கை வரலாற்றினை ஆய்ந்து நோக்கின் அவர் செய்த அற்புதங்கள் அனைத்தும் சிவனை நினைந்து அவர் பாடிய பாடல்கள் மூலமே நிகழ்ந்தது. ஆகையால் இவர் இப்பதிகத்தினைப் படிப்பதனால் நன்மை கிடைக்கும் என்பதனை உறுதியாக ஆணையிட்டுச் சொல்கிறார். பதிகத்தின் இறுதியில் கடைக்காப்பின் மூலம் தொல்காப்பிய உத்தியான ஆணையிடுதல் என்ற உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் திருவெண்காட்டுப் பதிகத்தில்,

“நல்லர் புகலியுள் ஞான சம்பந்தன்

செல்வன் எம் சிவனுறை திருவெண் காட்டின் மேல்

சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்

அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே”

திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் முதல் பகுதி, பா. 8(3):11

எனப் பாடியுள்ளார். அதாவது, ஞானசம்பந்தன் ஆகிய நான் பாடிய அருந்தமிழ்ப் பாக்கள் பத்தினையும் பக்தியோடு ஓதவல்லவர்களுடைய துன்பங்களோடு அவற்றிற்குக் காரணமான வினையும் அறும் என்பது நமது ஆணையாகும் என அறுதியிட்டுக் கூறுகிறார்.

தன் மேல் ஆணையிட்டு பாடியது போலவே இறைவன் மேல் ஆணையிட்டு இவர் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். திருக்கொடிமாடச் செங்குன்றூர் தலத்தில் உள்ள சிவனைக் காணத் திருஞானசம்பந்தர் அடியவர் குழாத்துடன் சென்ற காலம் கொடிய பனிக்காலமாக இருந்தது. இக்காலத்தில் அந்நிலப்பகுதியில் காணப்பட்ட பனியினால் ஏற்படும் குளிர் காய்ச்சல் அடியவர்களையும் பற்றியது. இதனால் அடியவர்கள் பலரது உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதனைக் கண்ணுற்ற திருஞானசம்பந்தர் குளிர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட அனைவரும் குணம் அடைய வேண்டும் என இறைவனை வேண்டி “அவ்வினைக்கு இவ்வினை" (திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் முதல் பகுதி, பா. 59(2)) எனத் தொடங்கும் திருநீலகண்ட பதிகம் பாடுகிறார். பதிகம் முழுவதும் இறைவன் மேல் ஆணையிட்டுப் பாடியுள்ளமை பதிகத்தில் சிறப்பாகும்.

தாம் பாடிய பதிகத்தின் கடைக்காப்பில் ஆணையிட்டுப் பாடியதன் மூலம் மக்களிடையே நம்பிக்கையையும் பக்தியையும் உருவாக்கியுள்ளார் என்கிறது ‘பண்பாட்டு வரலாறு பேசும் கடைக்காப்பு’ (முனைவர் இரா.கோகுல் (தொ.), பண்பாட்டு வரலாறு பேசும் கடைக்காப்பு, ப.35) நூல்.

சொல்லப்படாத உத்தி - அதிகாரத்தில் உள்ளவரை எதிர்த்தல்

திருநாவுக்கரசர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வு. சமண சமயத்தில் உயர் பதவியாகிய தருமசேனர் என்ற பதவியில் இருந்த திருநாவுக்கரசர் சமண சமயத்தை விட்டுத் தாய்ச்சமயமான சைவத்துக்குத் திரும்பியமையை எண்ணிப் பல்லவ மன்னனான மகேந்திர பல்லவன் கோபம் கொண்டு திருநாவுக்கரசரை அழைத்தபோது அவர் கொடுத்த பதிலாக,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

(திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம் முதல் பகுதி, பா. 8(3):11)

என்ற பாடல் சான்றாக இருக்கிறது. மன்னனது ஆணைக்கிணங்க சமணர்கள் திருநாவுக்கரசரை பல வழிகளில் கொடுமைப்படுத்திய போதும் அவர் அச்சமின்றி அதனை எதிர்த்துச் சைவத்தை நிலை நாட்டியுள்ளார்.

அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்ப்பது மக்கள் மனதில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது என்பதை பெரிய புராணம் வாயிலாக அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியத்தில் இல்லாத இவ்வுத்தியைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.

சொல்லப்படாத உத்தி - தலச் செலவுகள்

தேவார முதலிகள் மூவரின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்து நோக்கின், இவர்கள் ஓரிடத்தில் இருந்து ஈசனை வழிபட்டனர் எனக் கூறமுடியவில்லை. மூவரும் ஒவ்வொரு ஊருக்கும் கால்நடையாகச் சென்று அவ்வூரில் உள்ள கோயிலை வலம் வந்து பதிகம் பாடியுள்ளனர். ஊர்தோறும் சென்று இறைவனைத் தமிழால்பாடும் வழக்கத்தை தேவார மூவருக்கு முன்பே தொடங்கி வைத்து சைவ பக்தி இயக்கத்திற்கும் கால்கோளிட்டவர் காரைக்காலம்மையார் ஆவார். அவர் காட்டிய தலச்செலவு நெறியில் மிகத் தீவிரமாக இயங்கியவராக தேவார மூவருள் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடலாம். பக்தி இயக்கத்தினைக் கட்டமைத்தவர்கள் முக்கியமானவராக விளங்கும் திருஞானசம்பந்தர் மூன்று வயதிலிருந்து பதினாறு வயது வரை ஊர் ஊராகச் சென்று பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே திருநாவுக்கரசரும் தலச்செலவினை மேற்கொண்டு கோயில்களில் உழவாரப் பணியும் புரிந்துள்ளார். இவர்களை அடிற்றொற்றிய சுந்தரரும் இவ்வாறே தலச் செலவினை மேற்கொண்டுள்ளார் எனலாம்.

முழுமுதற் கடவுளாக இவர்களால் முன்னிலைப்படுத்தப்படும் சிவன் எங்கும் நிறைந்தவன் என்றும் எல்லாம் அறிந்தவன் என்றும் போற்றப்படுகிறார். இவ்வாறு வல்லமை கொண்டவரை ஒவ்வொரு ஊராகச் சென்று அங்குள்ள தலங்களில்தான் வணங்க வேண்டுமா என்ற ஐயம் ஏற்படுவது இயல்பான ஒன்றாகும். ஐயத்தின் அடிப்படையில் தேவார முதலிகள் வரவிற்கு முன்பிருந்த சமூக வரலாற்றினை ஆய்ந்தோமானால் தமிழகத்தின் தொல் சமயமான சைவம் மங்கி, அந்த இடத்திலே சமணமும் பௌத்தமும் ஆட்சி அதிகாரத்தோடு மன்னனையும் மக்களையும் மதம் மாற்றி கோலோச்சிக் கொண்டிருந்தன.

சைவராக இருந்த திருநாவுக்கரசரும் சமணத்தைச் சார்ந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் சிவன் அருளால் தாய்ச் சமயம் மீண்டார். இவ்வாறு இருந்த காலகட்டத்தில் தான் திருஞானசம்பந்தரது

பிறப்பு நிகழ்ந்தது. கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த பெரியபுராணம் சைவ அடியார்களது வாழ்வினைக் கூறும் ஒர் இலக்கியம் ஆகும். எனினும் சைவ அடியார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் பற்றிய பாடல் அதிகமாகப் பெரியபுராணத்தில் இடம்பெறுவதற்குக் காரணமாக அமைவது என அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுவது வருமாறு,

"களப்பிரருக்குப் பின்னும் வீழ்ச்சியடைந்த தமிழ்மொழியும் தமிழ் நாகரிகமும் எழுந்திராமல் இருப்பதைக் கண்டு இத்தமிழ்ச்சாதியைத் தட்டி எழுப்பவும், இதற்குப் பகையாய் இருப்பவர்களிடம் போரிடவும் தோன்றிய புரட்சி வீரராய்க் காண்கிறார் சேக்கிழார். ஏழாம் நூற்றாண்டில் இப்போராட்டத்தை நடத்தி திருஞானசம்பந்தர் வெற்றி கொண்டிராவிடில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சைவம் என்பதும் தமிழ் என்பதும் பொய்யாய்க் கனவாய்ப் போயிருக்கும் என்பதைச் சேக்கிழார் நன்றாக அறிந்தார். தமிழ் இனம் முழுவதும் யாராவது ஒருவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்றால் அந்த ஒருவர் ஞானசம்பந்தப் பிள்ளையாரே என்பதை உணர்ந்த சேக்கிழார் தம் நூலில் ஒருவருக்கு மட்டும் மூன்றில் ஒரு பங்கு வழங்கித் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்" (பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.137)

சமண, பௌத்தத்தை வலுவிழக்கச் செய்ய சமூகத்தில் உள்ள அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். இதற்கான வழியாக ஒவ்வொரு ஊர்தோறும் சென்று அங்குள்ள தலத்துச் சிவன் புகழ்பாடி மக்களை ஒன்றிணைத்து பல அற்புதங்களை சிவன் பெயரால் செய்து மக்களை மீண்டும் சைவத்தின்பால் திசை திருப்பினார். ஊர்தோறும் தலச் செலவினை மேற்கொண்டு அனைத்துச் சமூக மக்களையும் சைவத்தின்கீழ் ஒன்றிணைத்தார். அந்தணர் குலத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் பாணர் குலத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணரை தன்னுடன் அழைத்துச் சென்றமையும் வேளாளரான திருநாவுக்கரசரை 'அப்பரே' என அழைத்ததும் அக்காலச் சமூகத்தில் புரட்சியாகவே பார்க்கப்பட்டது.

தேவார முதலிகளின் தலச் செலவு என்ற உத்தி மக்களை சைவத்தினை நோக்கி நகர்த்தியது என்பதில் ஐயமில்லை. இவர்கள் செய்த அற்புதங்களில் சில வருமாறு திருஞானசம்பந்தர்,

- ✓ ஆண் பனைகளைப் பெண் பனைகள் ஆக்கியமை
- ✓ பூம்பாவையை உயிர்ப்பித்தமை
- ✓ பனிச்சுரத்தில் வருந்திய அடியவர்களையும் மக்களையும் காத்தமை
- ✓ கொல்லிமழவன் மகளைக் காப்பாற்றியமை

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்

சுடர்ச்சடை சுற்றிமு டித்துப்

பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ

வாரிட மும்பலி தேர்வர்

அணிவளர் கோலமெ லாஞ்செய்து பாச்சி

லாச்சிரா மத்துறை கின்ற

மணிவளர் கண்டரோ மங்கையை வாட

மயல்செய்வ தோஇவர் மாண்பே"

(திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் முதல் பகுதி, பா.56:4)

என்ற பாடல், முயலகன் நோயிலிருந்து கொல்லிமழவன் மகளை மீட்க இவர் பாடிய பதிகத்தில் இருந்த பாடல் ஒன்று

திருநாவுக்கரசர்,

- ✓ சிவனிடம் காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை
- ✓ பாம்பு தீண்டு இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பித்தமை

“ஒன்றுகொ லாமவர சிந்தை யுயர்வரை

ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்

ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது

ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே"

(திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம் முதல் பகுதி, பா. 47(2):1)

என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடி அப்பூதியடிகள் மகனை உயிர்ப்பித்தமை ஒரு சான்றாகும்.

சுந்தரர்,

- ✓ ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை
- ✓ முதலை வாயில் அகப்பட்டிருந்த பாலகனை உயிர்ப்பித்தமை

"உரைப்பார் உரைஉகந்துள்க வல்லார் தங்கள் உச்சியாய்

அரைக் கா டரவா ஆதியும்அந்தமும் ஆயினாய்

புரைக்காடு சோலைப் புக்கொளியூர்அவி னாசியே

கரைக்கால்முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே”

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், பா.83:4)

என்ற பதிகத்தினைப் பாடி பிள்ளையை மீட்டுப் பெற்றோரிடம் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இவர்கள் ஊர் ஊராகச் சென்று தலச் செலவை மேற்கொண்டு அதன் மூலம் அனைத்து மக்களையும் நேரில் கண்டும் அற்புதங்கள் மூலமும் கவர்ந்து சைவத்தினை மீண்டும் கட்டமைக்க வழிசமைத்துள்ளனர் எனலாம். தேவார மூவருள் அதிகமான தலங்களைப் பாடியவர் திருஞானசம்பந்தர் என்பதே அவரது தலச் செலவின் நெடுமையை எடுத்துக் காட்டுகிறது.

முடிவுரை

உலகத்தில் உள்ள மொழிகளிலே பொருளுக்கு இலக்கணம் வகுத்த ஒரே இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் தமிழிலே கிடைத்த முதல் நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறப்புமிக்க மிகப் பழமையான தொல்காப்பியத்தில் பொருள் அதிகாரத்தில் கடைசி இயலான மரபியலின் கடைசிப் பிரிவான நூலின் உத்திகள் என்ற தலைப்பில் நூலினை ஆக்குவதற்குரிய உத்திகளை தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பன்னிரு திருமுறைகளில் உள்ள தேவாரமும் நூல் வடிவில் உள்ள ஒன்று. தேவார ஆசிரியர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் பாடல்களில் உள்ள சமண, பௌத்த எதிர்ப்புக் கருத்துக்கள் மக்களிடம் சென்று சேருவதன் பொருட்டு பல உத்திகள் கொண்டு பாடப்பட்டுள்ளன. தமிழிலே முதல் நூலான தொல்காப்பியம் கூறும் உத்திகளுக்கும் தேவார முதலிகள் பாடல்களில் உள்ள உத்திகளுக்கும் இடையிலான தொடர்பு என்னவென்று ஆய்ந்துபோது இவர்கள் மூவரும் பயன்படுத்திய உத்திகளில் பல தொல்காப்பியத்தில் உள்ள உத்திகளைப் போன்றே உள்ளன. அது மட்டுமன்றித் தொல்காப்பியத்தில் கூறப்படாத உத்தி வகைகளையும் இவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. சமண, பௌத்த மறுப்பில் தேவார மூவரின் உத்திகள் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆய்ந்து எழுதப்பட்டுள்ளது.

Refences

1. Ilampuranar (Editor), Tolkappiyam (Letter,Word,Meaning), April 2010, Sharatha Publishing House, Rayapetta, Chennai - 600 014.
2. Pera.Munavar Bhakyamery, A History of Tamil Literature Towards Diversity (Refined and Expanded Edition), First Edition 2014, Bhuventhan Publishing House, Mylapore, Chennai - 600 004

3. S.V.Subramanian, Sanga Literature Patupattu Source and Exposition, Manivasakar Publishing House, Fifth Edition, Chennai - 600 104

4. Puliyurkesikan, Silappathikaram Source and Text, Gaura Publishing House Narayana Krishnaraja Puram, Tiruvallikeni, Chennai – 600 005

5. Artist's Text, Thirukkural, Thirteenth Edition - 2013, Thirumal Sadiyam, Chennai – 600 017

6. S.V.Subramanian, Sangha Literature Octopus, Manivasakar Publishing House, Chennai – 600 104

7. Dr.B.Kavitha (Editor), Ethnography in Sangha Literature, 2023, Masivan Publishing House, 111/199 b. Kudalur, Villupuram - 605 755

8. Mailai Seeni Venkatasamy, Ancient Tamil Commerce (Sangakalam), Sri Senpaha Publishing House Chennai – 600 017

9. M. Varatharasan, Nature in Palanthamil Literature, Pari Station, 184 Broadway, Chennai - 600 108

10. A. Thilakavathy, and Dr. M. Sivapalan. "Travel Components in Perumpanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 3, July 2023, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI: 10.5281/zenodo.8109846

11. A.Thilagavathi, and Dr Sivabalan M. "Travel Components in Cirupanatruppadai". PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 2, Apr. 2023, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127 DOI: 10.5281/zenodo.7879864

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

சாந்தி மகாலிங்கசிவம், கோகுல். இரா, "சமண பௌத்த மறுப்பில் தேவார மூவரின் உத்திகள் " புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜூலை 2025, பக். 36-44

Cite this Article in English

Shanthy Mahalingasivam, Gokul.R , "Samana Buddha Maruppil Thevara Movarin Uththigal" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 36-44

கிறித்துவ வேதாகமத்தில் பாடுபொருள்கள்

Kiṟittuva vētākamattil pāṭuporuḷkaḷ

விஜயபிரபா.பா, தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சூலூர்.

Vijayaprabha.P, Tamil Department, Rathnavel Subramaniam College of Arts and Science (Autonomous), Sulur.

ORCID ID : https://orcid.org/0009-0003-1345-4298

DOI: 10.5281/zenodo.16400639

Abstract

The Bible is the principle of love that we should love everyone as ourselves. This world has seen many changes. The intellectual thinking of people is a major factor in this. Their culture, customs, and ideologies have played a major role in the movement of human intellectual thought. In the intellectual thinking tradition of man, folk tales, songs, and the invention of writing moved him towards various discoveries. When stories and poems evolve through writing, they become close to history. Their meanings reflect that time and become something necessary in the present. In this way, the Bible, which explains the basis of Christianity, is identified as a very important book. This book, which explains the life and principles of Jesus Christ, is the foundation of Christianity. This article discusses the meaning of that Bible.

ஆய்வுச்சுருக்கம்

தன்னைப் போலவே அனைவரையும் நேசிக்க வேண்டும் என்ற அன்பின் கோட்பாடுதான் வேதாகமமாகும். இந்த உலகம் பல மாற்றங்களைக் கண்டடைந்து வந்துள்ளது. மக்களின் அறிவுசார் சிந்தனை முறை இதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அவர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சித்தாந்தங்கள் ஆகியவை மனித அறிவுகோட்பாட்டு இயக்கத்தில் பெரும் பங்காற்றியுள்ளது. மனிதனின் அறிவு சிந்தனை மரபில் நாட்டார் கதைகள், பாடல்கள் மற்றும் எழுத்துக் கண்டுபிடிப்பு அவனை பல்வேறு கண்டுபிடிப்புகள் நோக்கி நகர்த்தியது. கதைகள், கவிதைகள் எழுத்தின் வழியே பரிணமிக்கும்போது அது வரலாற்றுக்கு நெருக்கமானதாக மாறிவிடுகிறது. அதனது பாடுபொருள்கள் அக்காலத்தைப் பிரதிபலிப்பதாகவும் நிகழ்காலத்தில் அவசியப்பட்ட ஒன்றாகவும் நிலைபெற்று விடுகிறது. அவ்வகையில் கிறித்துவத்தின் அடிப்படையை எடுத்துரைக்கும் வேதாகமம் மிக முக்கியமான நூலாக அடையாளப்படுகிறது. இயேசு

கிறிஸ்த்துவின் வாழ்வியலையும் கொள்கைகளையும் விளக்கும் இந்நூல் கிறித்துவத்தின் அரிச்சுவடியாக உள்ளது. அந்த வேதாகமத்தின் பாடுபொருள் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

Key words: இயேசுகிறிஸ்த்து, வேதாகமம், பாடுபொருள், அன்பு, முத்தம்

முன்னுரை

ஒரு மொழியின் உச்சம் கவிதை எனலாம். கவிதையானது பிற கலைகளைப்போல் இல்லாமல் உணர்வுகளின் வெளிப்பாடாக அநுபவத்தின் செறிவாக விளைவதேயாகும். அவ்வகையில் கவிதைகள் சமுதாயத்திற்கு ஏற்ப பல பாடுபொருள்களை உள்ளடக்கிப் படைக்கப்படுகின்றன. அவ்வாறு படைக்கப்படும் கவிதைகள் தவிர்க்க முடியாத சமூக இயங்கியலாக மாறிவிடுகிறது. அவ்வகையில் வேதாகம கவிதையின் பாடுபொருள் தன்மையை இக்கட்டுரை ஆராய்கிறது.

புதுக்கவிதையின் பாடுபொருள்

பாடுபொருள் என்பது கவிதையின் கருவாக அமையும் கருத்து, தகவல், செய்தி ஆகும். இந்தக் கரு தன்னுடைய அனுபவத்தின் வெளியீடாகவும் சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளினால் ஏற்படும் நிலைப்பாடுகளையும் கொண்டே அமையும். பாரதியின் உள்ளத்தில் விடுதலை உணர்வே மேலோங்கி நின்றது. மேலும் ஆணும் பெண்ணும் சமம் என்ற உணர்வில் பெண்கல்வி பற்றியும் பாரதியின் கவிதைகளில் பாடுபொருள்கள் வெற்றி கண்டது.

“கரியைப்

பூமி

வைரமாக மாற்றுகிறது – எமது

கல்வி நிலையங்களோ

வைரங்களைக்

கரிகளாக்கித் தருகின்றன.” (தமிழன்பன் கவிதைகள், ப. 9)

என்று கவிதையாக்குகின்றனார் கவிஞர் தமிழன்பன். மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர வேண்டும் என்ற நோக்கில் கல்வி அமைய வேண்டும் என்று தன் உள்ளக் கருத்தை வெளிக்காட்டியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் காதல், வீரம் பாடுபொருளாகவும் நீதியிலக்கியத்தில் நீதி, அறம் பாடுபொருளாகவும் பக்தி இலக்கியத்தில் இறையுணர்வு பாடுபொருளாகவும் சிற்றிலக்கிய காலத்தின் தனிப்பட்ட ஒருவரின் வாழ்வியல் பற்றி பாடுபொருளாகவும்

பாடப்பட்டுள்ளன. காலந்தோறும் கவிதையின் பாடுபொருள்கள் மாறிமாறி அமைவதுண்டு. கவிதைகள் சமுதாயத்தின் தேவைகளைப் பிரபதிபலிக்கின்றன. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஓர் உலகம் இருக்கின்றது. கனவுகள், கற்பனைகள், இன்பங்கள், துன்பங்கள், பாவங்கள், ஆசைகள், நிராசைகள் என்று பல்வேறு உணர்வுகளை மனிதன் பெறுகின்றான். இந்த உணர்வுகள் தரும் விளைவுகள் அடங்கிய வாழ்க்கைப் பற்றிய செய்திகள் கவிதைக்குரிய பாடுபொருளாகின்றன.

கவிஞன் காலத்திற்கேற்ப காட்சிகளின் ஈர்ப்பினாலும் சமுதாய நிகழ்வுகளினாலும் தன் உணர்வுக்குள் கலந்து தன் உழைப்பாலும், கல்வியின் திறத்தாலும், தன் போக்கில் நல் உணர்வைப் புகுட்டுவது கவிதையின் கருவாகும். இக்கவிதையின் கரு எச்சூழல் பற்றியதாகவும் இருக்கலாம். காலத்திற்கேற்ப கவிஞனின் படைப்புச் சிந்தனையும் உணர்ச்சி மொழியும் வெளிப்படுகிறதாய் அமைகிறது.

“அறிவியல் கால்களின்

அசுர வேகத்தோடு

ஓடிவருகிறது உலகம்

ஆசா பாசங்கள்

அடிபட்டுப் போவதனால்

மரத்துப் போய்விடுமோ மனிதம்?” (தமிழன்பன் கவிதைகள், ப. 17)

மனிதநேயத்தைப் பாடுபொருளாகக் கொண்டு இக்கவிதை அமைந்துள்ளது. சமுதாயத்தின் ஓட்டம், அறிவியலின் நாட்டம், காலமாற்றம் மனித உணர்வுகளின் வீச்சு போன்றவற்றால் மனிதம் கேள்வக்குறியாகி விடுமோ என்ற சமுதாய அக்கறையை வெளிப்படுத்துகின்றது.

கிறிந்துவ வேதாகமத்தில் பாடுபொருள்கள்

வேதாகமத்தின் பாடுபொருள்கள் பரிசுத்த வாழ்வின் பொன் ஏடுகளாகும். மனிதன் இம்மையிலும் மறுமையிலும் மனமகிழ்ச்சியோடு வாழவே சித்தங்கொண்டவர் கர்ந்தராகிய இயேசு கிறிஸ்து. தன்னுடைய மலைப் பிரசங்கத்தில் மனிதப் பண்புகளைக் கூறி இப்பிடித்தான் வாழவேண்டும் என்ற பிதாவின் கட்டளைப்படி வாழ்வின் பரிபூரணத்தைக் கற்றுக்கொடுத்துள்ளார்.

இயேசுவின் அன்பு, இதயத்தில் ஒளிர்ந்தால் - துன்பமும் இன்பமாய் மாறிவிடும்! விசுவாசித்தால் தேவமகிமையைக் காணமுடியும் என்று வேதம் கூறுகிறது. வேதாகமத்தில் பாடுபொருள்கள் தன்னை சுயபரிசோதனைச் செய்ய ஏவுகிறது. இல்வுலக மனுமக்கள் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள் என்ற நோக்கில் எரையும் சகோதர சிநேகத்தில்

நேசிக்கும் மனப்பான்மையைக் கற்றுத்தருகிறதாய் அமைத்துள்ளது.

"அமைதியான அதிகாலை நேரத்தில், கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருக்கும்போது, அவருடைய (இயேசுவின்) மெல்லிய சத்தத்தை உங்கள் இருதயத்தில் கேட்க முடியும். அவருடைய மகிமையைக் கண்டு உங்களால் களிகூற முடியும்."3 (ஜெப. வல். இர., ப. 3)

என்கிறார் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தின் பொறுப்பாசிரியரான மோகன் சி. லாசரஸ். கிறித்துவத்தில் பாடுபொருள்கள் பலவாக இருந்தாலும் எந்தச் சூழ்நிலைகளையும் தேவனுடைய சமூகத்திற்குக் கொண்டு சென்று ஜெபிக்கும் போதுதான் அவருடைய அதிகயமான வழிநடத்துதலை உணரமுடியும். வேதாகமத்தின் பாடுபொருள்களாக, அன்பு, முத்தம், ஏழை, வாலிபம், நம்பிக்கை, அறிவு, விபச்சாரம், கணவன் - மனைவி, பெண்மை, மதுபானம், நாவு, நீதி, உடன்படிக்கை, மருத்துவம், பகுத்தறிவு, ஞானம், புத்தி, ஏழை, தாய்மை போன்றவை பாடுபொருளாக அமைந்துள்ளன. இதில் அன்பு, முத்தம் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

அன்பு

மனித உயிர்கள் கருவறையில் தோன்றியது முதல் கல்லறையில் மறையும் வரை மனம் ஏங்குவது அன்புக்காகவே!. அன்பு, அக்கறையுடன் கூடிய எதிர்பார்ப்புகளையும் உரிமைகளையும் ஏற்படுத்தி வாழ்வை அழகாக்குகின்றது. அன்பின் பரிசுத்தம் என்னவென்றால் அன்பிற்கு பிற உயிர்களை நேசிக்க மட்டுமே தெரியும்.

"என் தேடல்களுள்

என்றென்றும் எனக்காகத் தோன்றிய

தேவதை நீ அம்மா…" (மெல்ல அசையும் கிளை, ப. 57)

என்ற தாயின் அன்பில் தனியாத தாகம் கொண்டவராக முனைவர் வா. சித்ரா அவர்கள் தன்னுடைய தாய்மீது கொண்ட அன்பை வெளிக்காட்டியுள்ளார். வாழும்போது கிடைக்கும் ஓர் உண்மை அன்பினால் சொர்க்கத்தைத் காணமுடியும். மனிதநேயம், இரக்கம். பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய வசனமானது,

"நான் மனுஷர் பாஷைகளையும்

தூதர் பாஷைகளையும் பேசினாலும்,

அன்பு எனக்கிராவிட்டால்

சத்தமிடுகிற வெண்கலம் போலவும்,

ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

நான் தீர்க்கதரிசன வரத்தை

உடையவனாயிருந்து,

சகல இரகசியங்களையும்,

சகல அறிவையும் அறிந்தாலும்,

மலையை பேர்க்கத்தக்கதாக

சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும்,

அன்பு எனக்கிராவிட்டால்

நான் ஒன்றுமில்லை.” (I கொரிந்தியர் 13:1,2)

அன்பே, மெய்யான வாழ்வின் பரிபூரணம் என்கிறார் பவுல். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன், தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்பபடி அன்பு கூறுவான்? என்று வேதம் கூறுகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

“இப்பொழுது

விசுவாசம், நம்பிக்கை, அன்பு

இம்மூன்றும் நிலைத்திருக்கிறது;

இவைகளில் அன்பே பெரியது!” (கொரிந்தியர், 13:13)

அன்பு புதுமாற்றத்தை ஏற்படுத்தும், கடினமான இதயத்தையும் கனிவாக மாற்றிவிடும். உணர்வென்னும் ஊற்றுக்குள் உயிர் மொட்டுக்களை அரும்பச் செய்யும் மலை போன்ற கோபத்தையும், ஒரு நொடிப்பொழுதில் மாற்றிவிடும். நம்பிக்கை நிறைந்த அன்பில் நாளும் சாந்தேஷமே பொங்கும். அன்பு திரளான பாவங்களை மூடும் என்று வேதம் சொல்கின்றது.

“அன்பலே பயமில்லை,

பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்;

பயமானது வேதனையுள்ளது,

பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல” (I யோவான் 4:18)

பிதாவாகிய தேவன் இவ்வுலகின் மனுமக்களை நேசித்து அன்பு செலுத்தியதின் விளைவே தன் சொந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நமக்காக சிலுவையில் அறைய ஒப்புக்

கொடுத்தார். சர்வலோகத்தின் பரிகாரியானார். அன்பு பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. அன்பின் ஊற்றுக்கண்கள், ஒரு போதும் வற்றிப்போவதில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிரூபத்தில் இடம் பெறும் வசனமானது,

"பகலுக்குரியவர்களாகிய

நாமோ தெளிந்தவர்களாயிருந்து,

விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும்

இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும்

தரித்துக்கொண்டிருக்கக் கடவோம்" (I தெசலோனிக்கேயர். 5:8)

ரோம சாம்ராஜியத்தின் படைவீரர்கள் கடும் பயற்சியை மேற்கொள்கிறவர்களாகவும் ஒழுங்கு கட்டுப்பாடு நிறைந்தவர்களாகவும் உலகத்தின் பெரும்பகுதியை ஆதிக்கம் செலுத்துமளவிற்கு ரோமப் படைகள் வலிமை வாய்ந்தவையாய் இருந்தனவாம். சரித்திரத்திலேயே தன்னிகரற்ற இராணுவ அமைப்பைக் கொண்டதாக சரித்திரம் கூறுகிறது. அவர்களது வெற்றிக்கு அவர்கள் பூண்டிருந்த சர்வாயுதவர்க்கமும் ஒரு காரணமாக இருந்தனவாம். ரோம் போர்வீரர்களின் சர்வாயுத வர்க்கத்தைப்போல் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம் அவசியமென்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கியுள்ளார். கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொண்டு, படைவீரர்களின் தோல் கச்சையைப் போல் சத்தியத்தை இருப்பில் இறுகக் கட்டிக்கொண்டும் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்திருக்க வேண்டும் என பவுல் கூறியுள்ளார். அப்பொழுது ஆவிக்குரிய வாழ்க்கையில் வெற்றியடைய முடியும் என்று வேதம் கூறுகிறது.

முத்தம்

அன்பின் மிகுதியினால் கொடுக்கப்படுகின்ற முத்தம் மனவெளியெங்கும் ஆனந்தப் பரவசத்தை உருவாக்கும்; காதலோடு கொடுக்கின்ற முத்தம் உணர்வலைகளில் கலந்து உயிர் அணுக்களில் இன்பத்தின் இனிமையை தந்தியடித்துக் கொண்டே இருக்கும்; வஞ்சனையோடு கொடுக்கின்ற முத்தம் நெஞ்சத்தைக் கீறி துன்பத்தை ரசிக்கும்; காத்திருந்து, வெற்றிகண்ட மனம் கொடுக்கின்ற முத்தம் தன்னை மறந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் இன்பக்கூத்தாடும்.

"ஆதாம் ஏவாள் இருவரையும்

ஆண்டவன்...

உலகில் சிருஷ்டித்த அன்றே

'முத்தம் பிறந்து விட்டது' என்று

ஆங்கில இலக்கியங்கள்

அத்தனையும் இயம்புகின்றன!" (இல.சி. கவி, ப. 200)

என்று தங்கவயல் லோகிதாசனார் கூறியுள்ளார். முத்தமென்பது அன்பின் பாசமுத்திரையாகக் கருதப்படுகின்றது. முத்தங்களின்றி குழந்தை தத்தித் தவழ்ந்திருக்க முடியாது. முத்தம் இன்பத்தின் ஊட்டச்சத்தாகிறது.

"வேந்தரின் கரங்களை மாந்தரும்,

தலைரின் கரங்களைத் தொண்டரும்,

ஆண்டவனின் பாதங்களை அடியாரும்,

அடியாரின் அடிச்சுவட்டைப் பக்தரும்,

.... உலகெங்கனும் முத்தமிட்டு மகிழும்

நிகழ்ச்சி, ஓர் நித்திய நிகழ்ச்சியாகும்!" (இல.சி. கவி, ப. 203)

இவ்வாறாக, முத்தங்களினால் மெய்சிலிர்த்த அழகான ஓர் புத்துணர்வு ஏற்படவே செய்கிறது. தாய்ப்பால் போன்று முத்தம் தூய்மையானது. அறிவியல் ஆய்வுகளின்படி முத்தம் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில், உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருகின்றதாம்.

அப்போஸ்தலானாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிரூபத்தில் இடம்பெறும் வசனமானது,

"கடைசியாக, சகோதரரே

சந்தோஷமாயிருங்கள், நற்சீர்பொருந்துங்கள்

ஆறுதலடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள்,

சமாதானமாயிருங்கள், அப்பொழுது

அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய

தேவன் உங்களோடை கூட இருப்பார்.

ஒருவரையொருவர்

பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்." (II கொரிந்தியர், 13: 11,12)

பரிசுத்த முத்தத்தோடு ஒருவரையொருவர் வாழ்த்துங்கள் என்று வேதாகமம் கூறுகிறது. பரிசுத்தம் என்றால் சுத்திகரிக்கப்பட்ட சிந்தை என்றே பொருள்படும். பரிசுத்த முத்தத்தில் பாசமும் பாதுகாப்பான உணர்வுமே தோன்றும். முத்தம் நாற்சீர் பொருந்திய நல்லொழுக்கத்தின் நேசமுத்திரையாயிருக்கிறது. எல்லாக் காயங்களுக்கும் மருந்தாகி ஆயுளைக் கூட்டும் அக்கறையான அரவணைப்பின் உணர்வை ஏற்படுத்துவது முத்தமாகும். லூக்கா சுவிசேஷத்தில் இடம்பெறும் வசனமானது,

“அவர்களுக்கு முன்னே

பன்னிருவரில் ஒருவனாகிய

யூதாஸ் என்பவனும் வந்து,

இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்.

இயேசு அவனை நோக்கி

யுதாசே முத்தத்தினாலேயே

மனுஷகுமாரனனக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.” (லூக்கா, 22:47,48)

இயேசுவும் அவருடைய சீடர்களும் ஒலிவ மரங்கள் நிறைந்த கெத்சமனே தோட்டத்தில்வியாகுலத்துடன்வியாழன்இரவினிலேஜெபம்செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது, இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவனான யூதாஸ்காரியோத் முப்பது வெள்ளிக்காசுக்காக ஆசைப்பட்டு இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுக்கும்படி ரோம போர்ச்சேவகரின் கூட்டத்தோடும், பிரதான ஆசாரியர், பரிசேயர்களின் ஊழியக்காரரோடும் தீவட்டிகளோடும் பந்தயங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான். யாரைத் தேடுகிறீர்கள் என்று இயேசு கேட்டு, நீங்கள் தேடுகிற இயேசு நான்தான் என்று தைரியமாகக் கூறினார்.

ரபீ வாழ்க் எனக் கூறிய யூதாஸ் இயேசுவை முத்தமிட்டான். இயேசு பிதாவின் சித்தப்படி எல்லாவற்றையும் அறிந்து, யூதாசே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய் என்று மனதுருக்கத்துடன் இயேசு கூறியுள்ளார். சீடனாகிய யூதாஸ் இயேசுவை ரபீ என்று அன்போடு அழைத்து கூடவே வாழ்ந்து வஞ்சக முத்தம் இடுகிறான்.

“பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது” (I தீமோத்தேயு 6:10)

என்று வேதம் தெளிவுபடுத்துகின்றது. அன்பினால் கொடுக்கின்ற முத்தம் புதுஉத்வேகத்தைத் தருகின்றது. பொய்யான முத்தம் மெய்யான வாழ்வை அழிக்கின்றது என்று வேதத்தினால் மனத்தெளிவு கொள்ளமுடிவதாய் இயேசுவின் பாடுகள் காட்சிப்படுத்தப்படுகிறது.

முடிவுரை

வேதாகமத்தின் பாடுபொருள்களாக, அன்பு, முத்தம், ஏழை, வாலிபம், நம்பிக்கை, அறிவு, விபச்சாரம், கணவன் - மனைவி, பெண்மை, மதுபானம், நாவு, நீதி, உடன்படிக்கை, மருத்துவம், பகுத்தறிவு, ஞானம், புத்தி, ஏழை, தாய்மை போன்றவை பாடுபொருளாக அமைந்துள்ளன.

அன்பு பிறருக்குப் பிழையைச் செய்யாது; ஆதலால் அன்பு சமூகத்தின்

ஆகச்சிறந்த வாழ்வியலை நிலைநிறுத்துகிறது. அது மனிதர்களை ஒன்றிணைக்கிறது. விட்டுக்கொடுக்கிறது. மகிழ்ச்சியளிக்கச் செய்கிறது என்பது விளங்கலாகிறது.

அன்பினால் கொடுக்கின்ற முத்தம் புதுஉத்வேகத்தைத் தருகின்றது. பொய்யான முத்தம் மெய்யான வாழ்வை அழிக்கின்றது என்று வேதத்தினால் மனத்தெளிவு கொள்ளமுடிவதாய் இயேசுவின் பாடுகள் காட்சிப்படுத்தப்படுகிறது.

துணைநின்ற நூல்கள்

1. சித்ரா, வா., முனைவர், 2022, **மெல்ல அசையும் கிளை**, முதல் பதிப்பு, மலர்க்கண்ணன் பதிப்பகம், இராணிப்பேட்டை.
2. ஈரோடு தமிழன்பன், 2014, **ஈரோடு தமிழன்பன் கவிதைகள்**, முதல் பதிப்பு. நிலாச்சாரல் லிமிடெட், கார்வே, யூகே.
3. மோகன் சி லாசரஸ், 2021. **ஆவியின் கனி**, முதல் பதிப்பு. இயேசு விடுவிக்கிறார் பதிப்பகம், தூத்துக்குடி.

References

1. Dr. Chitra, V., 2022, **Mella Aayyum Kilai**, First Edition, Malarkannan Publishing House, Iranipet.
2. Erode Tamilanban, 2014, **Erode Tamilanban Poems**, First Edition. Nilacharal Limited, Garvey, UK.
3. Mohan C Lazarus, 2021. **Fruit of the Spirit,** First Edition. Jesus Frees Publishing House, Thoothukudi.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

விஜயபிரபா.பா, “கிறித்துவ வேதாகமத்தில் பாடுபொருள்கள்” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜூலை 2025, பக். 45-53

Cite this Article in English

Vijayaprabha.P, “Kiṟittuva vētākamattil pāṭuporuḷkaḷ” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 45-53

புதுக்கோட்டை வட்டார மாரியம்மன் வரலாற்றில் தொன்மமும் பண்பாட்டு மோதல்களும்

Deconstructing the Mythology and Cultural Dynamics of Mariamman in Pudukkottai Region

வினோதா.செ*, ஜெயபால்.ப*

தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

Vinotha.S*, Jayapal.P*

Department of Tamil, Sri Ramakrishna Arts and Science College, Coimbatore.

DOI: 10.5281/zenodo.16400715

Abstract

This study undertakes a critical examination of the oral traditions surrounding Mariamman, a prominent deity in the Pudukkottai region. Specifically, this research aims to uncover the cultural exploitation that occurs in the oral narratives and storytelling practices associated with Mariamman. By analyzing the various stories, legends, and myths about Mariamman, this study seeks to expose the power dynamics and cultural hegemonies that shape the representation and interpretation of this deity.

Through a critical folkloric approach, this research will examine how dominant cultural narratives and power structures influence the oral traditions of Mariamman, leading to cultural exploitation and marginalization of certain groups. This study aims to contribute to a deeper understanding of the complex relationships between culture, power, and representation, and to shed light on the ways in which cultural exploitation operates in the context of folk culture and oral traditions.

Keywords: Mariamman, Folkloric Analysis, Oral Traditions, Cultural Exploitation, Power Dynamics, Cultural Hegemony, Representation, Folk Culture, Oral Narratives, Marginalization, Pudukkottai Region, Cultural Studies

ஆய்வுச்சுருக்கம்

நாட்டுப்புறவியலில் காணலாகும் பல்வேறு வழக்காறுகளில் கதைகளும் ஒன்று. நாட்டுப்புறக் கதைகள் என்பவை வாய்மொழி மூலமாக அடுத்த தலைமுறைக்குப்

பண்பாட்டையும் நடைமுறை இயங்கியல்களையும் கடத்தப் பயன்படும் ஒரு கருவியாகும். இக்கதைகள் மனிதன் தோற்றம் அடைந்த காலகட்டத்திலே தோற்றம் பெற்றன எனலாம். வாய்மொழியாக வழங்கப்படும் கதையானது ஒரே மாதிரியாக அமைவதில்லை. இவை கற்பனையுடன் தன் அனுபவத்தையும் ஒன்றுடன் ஒன்று கலந்து பரவுகிறது. தெய்வ வழிபாடுகளை அடியொற்றி காணப்படக்கூடிய கதைகள் மக்களினுடைய வாழ்வியலை எடுத்துரைப்பதாக அமைகிறது. சிறு தெய்வங்கள் மக்களுடைய வாழ்வியலில் இருந்து தோன்றியவை. தெய்வங்களைப் பறைசாற்றும் விதமாகவே பல்வேறு நாட்டுப்புறக் கதைகள் மக்களிடையே காணப்படுகிறது. பல்வேறு மக்களால் வழிபாட்டிற்கு உரிய தெய்வமாக இருக்கக்கூடிய மாரியம்மன் சிறு தெய்வம் என்பது அறிஞர்களின் கூற்று. புதுக்கோட்டை வட்டாரத்தில் பல்வேறு மாரியம்மன் கோவில்களும் கதைகளும் கிடைக்கப்பெறுகிறது. இருப்பினும் அவற்றின் சாரம் ஒன்றையேத் தழுவி இருப்பதைக் களாய்வின்வழி அறியப்பட்டு அதுவே ஆய்வுக்களமாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இங்கு மக்கள் வழிபாட்டில் காணலாகும் மாரியம்மன் பெரு தெய்வங்களினுடைய நீட்சியில் உருவாக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது. வாய்மொழியில் நிலவும் புதுக்கோட்டை வட்டார மாரியம்மன் கதையில் காணலாகக் கூடிய பண்பாட்டு மோதல்களையும் பண்பாட்டு ஆக்கிரமிப்புகளையும் விளக்கி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

Keywords: Mariamman, Folkloric Analysis, Oral Traditions, Cultural Exploitation, Power Dynamics, Cultural Hegemony, Representation, Folk Culture, Oral Narratives, Marginalization, Pudukkottai Region, Cultural Studies

முன்னுரை

மனிதன் தோன்றிய காலம் தொட்டு மிகப்பெரிய பண்பாட்டு வளர்ச்சியாக பார்க்கப்படுவது வழிபாட்டு முறையே. பயத்தால் தோன்றிய வழிபாடு பின்னர் தன் இனம் மக்கள் நலன் காக்க வேண்டி விரிந்தது. நாட்டுபுற மக்களிடையே சிறு தெய்வ வழிபாடுகளின் தொடர்ச்சி இன்றளவும் நிலைத்து நிற்கிறது. பெண் சிறு தெய்வங்களே தமிழக சிறு தெய்வங்களில் முதன்மை இடம் பெறுகிறது. களாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு மாரியம்மன் தெய்வங்கள் வழிபாட்டில் உள்ளன. இமடமாரியம்மன் கோவில் தொன்மங்கள் அறியப்பட வேண்டியதும் ஆராயப்பட வேண்டியதும் ஆகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்க கூடியக் கோவில்களில் மக்கள் பல்வேறு விதமான நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறையினையும் மேற்கொண்டு வருகின்றனர். மிக நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டிருக்க கூடிய மாரியம்மன் கோவிலிகளில் பல்வேறு பண்பாட்டு மையங்களைக் காண முடிகிறது. வாய்மொழி வழக்காறுகள் மாறுதல்களுக்கு உட்பட்டு தொடர்ச்சியினைக் கொண்டு விளங்குகின்றன. புதுக்கோட்டை வட்டார

மாரியம்மன் கோயில்களின் தொன்மக் கதைகளில் ஒற்றுமைகள் காணப்படுகிறது. அவ்வொருமைத்தன்மையை ஆய்வின் மூலமாகக் கொண்டு கதையில் காணலாகும் பண்பாட்டு மோதல்களையும் தொன்மத்தையும் பண்பாட்டு மாற்றங்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

புதுக்கோட்டை வட்டார மாரியம்மன்களின் தொன்மம்

முன்னோர் காலகட்டத்தில் ‘இருசிகன்’ என்ற முனிவன் வாழ்ந்து வந்தான். அதே காலகட்டத்தில் ‘காதி’ என்ற மன்னன் அந்த நாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னனுக்கு ‘சத்தியவதி’ என்ற அழகான மகள் இருந்தாள். இவளை மணம் செய்து கொள்ள முனிவர் விரும்ப அவ்வாறே மன்னனும் தன்னுடைய மகளை இருசிகன் முனிவனுக்கு திருமணம் செய்து கொடுத்தார். இத்தம்பதியினருக்கு பல வருடங்களாகியும் பிள்ளை பேறு இல்லாததால் தன்னுடைய கணவரிடம் பிள்ளை வரம் வேண்டி நின்றாள் சத்தியவதி.

முனிவர் இவளைப் பெற்ற காதி ராஜாவுக்கும் ஆண் வாரிசு இல்லாததால் தன் மனைவி சத்தியவதிக்கும் அவள் தாயாருக்கும் பாயாசம் தயார் செய்து கொடுத்தார். தாயும் மகளும் பாயாசத்தை மாற்றி உண்டுகொண்டதால் இருவருக்கும் மாறுபட்ட கருத்துக்களுடன் குழந்தை பிறந்தது. சத்தியவதியின் தாயாருக்குப் பிறந்த குழந்தை ‘கௌசிகன்’ என்றும் சத்தியவதிக்குப் பிறந்த குழந்தை ‘ஜமத்கனி’ என்று பெயர் சூட்டப்பட்டது. பல வருடங்கள் கடக்க ஜமதக்னி பருவமெய்திய ‘ரேணுகா தேவியை’ மணம் செய்து கொண்டு இருவரும் ஆறு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். அவர்களுள் ஐந்தாவது குழந்தை திருமாலாகவும் ஆறாவது குழந்தை பரசுராமாராகவும் அவதாரம் எடுத்தனர். பரசு என்றால் கோடரி என்று பொருள். இதனை ஆயுதமாகக் கொண்டிருந்த காரணத்தினால் பரசுராமர் என்று அழைக்கப்பட்டார். ஒரு சமயத்தில் ஜமதக்னி முனிவரிடமிருந்து காமதேனுவை காத்தவிரியன் என்ற மன்னன் அபகரித்து சென்றார். இதனைக் கண்ட பரசுராமன் காத்தவிரியனுடன் யுத்தம் செய்து காமதேனுவை மீட்டு வந்தார். நடந்த யுத்தத்தில் மன்னன் காத்தவிரியன் இறந்துவிட்டான்.

ஒரு அந்தணராக இருந்து மன்னரைக் கொன்றதால் பாவம் ஏற்பட்டுவிடும் என்றெண்ணி அப்பாவத்திலிருந்து விடுபட பரிகாரம் தேடினர். இதனைப் போக்குவதற்கான ஜமத்கனி முனிவர் புண்ணிய நதிகளில் நீராடி வர பரசுராமனிடம் கூறினர். இக்கட்டளையை ஏற்ற பரசுராமரும் அவ்வாறே செய்யத்தொடங்கினார். அப்பொழுது ஹோமம் செய்வதற்காக கங்கை நீரைக் கொண்டு வரும்படி ரேணுகாதேவியிடம் கூற அக்கட்டளையை ஏற்று கங்கை நீரை எடுப்பதற்கு சென்றார். அவ்வேளையில் ‘சித்திர நாதன்’ எனும் ‘கந்தர்வன்’ தன் மனைவியுடன் கங்கையில் நீராடிக் கொண்டிருந்தான். அவ்வழகினைக் கண்டு ரேணுகாதேவி தன் வேலையை

மறந்து மெய் மறந்து நின்றாள். சிறிது நேரம் கழித்து தன் தவறினை உணர்ந்து குடத்தைத் தொடும்பொழுது குடம் பிடிக்கு வரவில்லை. நேரம் தாமதமானதால் முனிவர் தனது மனைவியின் செயல்பாட்டினை ஞான திருஷ்டியில் உணர்ந்து கோபம் கொண்டார். இதனால் தனது மகன்களை அழைத்து தன்னுடைய மனைவியின் செயல்பாட்டினைக் கூறி தாய் ரேணுகா தேவியைக் கொன்று வர உத்தரவிட்டார். முனிவரின் முதல் நான்கு மகன்களும் மறுத்து விடவே இறுதியாக பரசுராமனிடம் கூறினார். பரசுராமர் தந்தையின் கட்டளையைக் கேட்டார். அவ்வேளையில் தனது தந்தை முனிவரிடம் இரண்டு வரங்கள் வேண்டி நிற்க முனிவரும் உனது தாயைக் கொன்று விட்டு வந்தால் இவ்விரண்டு வரங்களையும் தருவதாகக் கூறினார்.

பரசுராமர் தன்னை கொல்ல வருவதைக் கண்ட ரேணுகாதேவி தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று தன்னை அடைக்கலம் செய்யக் கேட்டார். அப்பொழுது ஒரு பிராமணர் வீட்டிற்குச் சென்று அடைக்கலம் கேட்டார். அவர்களும் அவரை ஏற்று தனது வீட்டு முற்றத்தில் ஒளிந்து கொள்ளும்படி செய்தனர். அப்பொழுது பரசுராமர் தாயைத் தேடி வரும் ஆவேசத்தைக் கண்டு ரேணுகா தேவியைப் பின்வாசலில் வெளியே தப்பி செல்லும்படி கூறினார். அவ்வாறு தப்பி சென்று வெட்டியான் ஒருவன் வீட்டில் தன் மகன் தன்னைக் கொல்ல வருவதாகக் கூறி அடைக்கலம் கேட்டார். வெட்டியானும் அவனது மனைவியும் அவர்களை அடைக்கலம் படுத்தி வாயில் காவலில் காத்து நின்றனர். அப்பொழுது காவல் காத்து நின்ற வெட்டியானுக்கும் பரசுராமருக்குமிடையே யுத்தம் நிகழ்ந்தது. யுத்தத்தில் வெட்டியான் தலை துண்டிக்கப்பட்டுவிட்டது அவனது மனைவியும் இறந்துவிட்டாள். ரேணுகாதேவி பரசுராமரைக் கண்டு எனக்கு அடைக்கலம் கொடுத்தவர்களைக் கொன்று விட்டாயே என்ற எண்ணி புலம்புகையில் தாய் ரேணுகா தேவியின் தலையையும் பரசுராமர் வெட்டிவீழ்த்தினார்.

தனது தாயைக் கொன்று விட்ட செய்தியை முனிவரிடம் கூற அகமகிழ்ந்தார். அவற்றோடு தான் இரண்டு வரங்கள் கேட்ட செய்தியை முனிவரிடம் கூற முனிவரும் அவற்றை ஏற்றார். முதல் வரமாவது இறந்தவர்கள் மீண்டும் உயிர்ப்புடன் வரவேண்டுமென்றும் இரண்டாவது வரமாவது நடந்த செய்திகள் யாவும் அவர்களுக்கு நினைவுக்கு வராமல் இருக்கவேண்டுமென்றும் கேட்டார். முனிவரும் தனது கரகத்தில் உள்ள கமண்டலம் தீர்த்தத்தைக் கொண்டு வெட்டுண்டு தலையை உடலுடன் ஒட்டி தீர்த்தத்தைத் தெளித்தால் தலை ஒட்டிக் கொள்ளும் என்று கூறினார். அச்செயலின் போது வெட்டியான் தலையை வெட்டியான் உடம்பிலும் அவனுடைய மனைவியின் தலையை, தனது தாய் ரேணுகா தேவியின் உடம்பிலும், ரேணுகா தேவியின் தலையை வெட்டியான் மனைவி உடலிலும் சேர்த்து வைத்துவிட்டார். தன் தாயின் உடம்பில் வெட்டியான் மனைவி தலையையும் வெட்டியான் மனைவி தலை தனது தாயின் உடம்பிலும் கண்டு

தனது தவறை உணர்ந்து தனது தந்தை ஜமதக்கனியிடம் முறையிட்டார். தலையைக் கொண்டுதான் உடலை அடையாளப்படுத்த முடியும். அதலால் ரேணுகாதேவியின் தலை ஒட்டப்பட்ட உடலைத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டார் முனிவர். பின்னர் வெட்டியான் மனைவி தலை ஒட்டப்பட்டுள்ள ரேணுகாதேவியின் உடல் தெய்வ உடலாக கருதப்பட்டது. வெட்டியான் காத்தவிரியனாக மாற்றப்பட்டு மாரியம்மன் வழிபாட்டில் முன்னோடியாகத் திகழ ஆசிர்வதிக்கப்பட்டதாகக் கதை அமைகிறது.

மாரியம்மன் வழிபாட்டில் ஆரியமயமாக்கம்

தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அனைத்துத் தரப்பட்ட மக்களாலும் வழிபடக்கூடிய தெய்வமாக இருப்பது மாரியம்மன். பல்வேறு காரணிகளால் பல்வேறு பெயரினைக் கொண்டும் பல்வேறு வழிபாட்டு முறைகளையும் கொண்டு இத்தெய்வங்கள் அமைகின்றன. இதன் ஒற்றுமை என்பது சிறுதெய்வ வழிபாட்டு முறையை ஒட்டிய பெண்தெய்வங்கள் என்பதுதாம். மழைவழிபாடு மாரியம்மன் வழிபாட்டின் தொடக்கமென்று பல்வேறு அறிஞர்கள் கருதி வருகின்றனர். இன்னும் சில ஆய்வாளர்கள் கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியை மாரியம்மன் வழிபாடு என்று கூறுவதற்கான இடமும் உண்டு. தொ.பரமசிவம் அவர்கள் தமிழகத்தில் அதிகப்படியான பெண் தெய்வங்கள் உருப்பெற்றதற்கான காரணத்தை தெய்வம் என்பதோர் என்ற நூலில் விளக்கியுள்ளார். அவற்றில் அதிகப்படியான பெண்கள் ஆணாதிக்க சிந்தனைகளாலும் இரு சாதிகளுக்கு இடையே உள்ள மோதல்களாலும் இறந்துபட்டுக் கடவுளாக உருமாற்றி வழிபட தொடங்கினர் என்கிறார்.

இவ்வாறாக சிறுதெய்வப் பெண்கடவுள் கதைகள் அமைந்தாலும் காலப் போக்கில் செல்வாக்குக் கருதி அத்தெய்வங்களைத் தங்கள் வழிபாட்டிற்குள் இழுத்து கொள்ளக் கூடிய செயலைப் பெருந்தெய்வ வழிபாட்டினர் மேற்கொண்டனர். இச்சூழலை இக்கதையிலும் காணமுடிகிறது.

ஜமத்கனி முனிவர் வரலாறு பேசும் பத்ம புராணம் முனிவரின் மனைவியாகிய ரேணுகாதேவி பரசுராமரின் வரத்தால் உயிர் பெற்றதோடு நிறைவடைகிறது. வெட்டியான் குடும்பம் இப்புராணத்தில் இடம்பெறவில்லை. மக்களிடையே நிலவும் வாய்மொழி வரலாற்றில் நிலத்திற்குத் தகுந்த மாற்றம் செய்யப்பட்டு தொன்மக்கதை வடிவிலான கதை அமைந்து இருப்பதை அறியமுடிகிறது. மக்களினைப் பெருந்தெய்வ வழிபாட்டிற்குள் கொண்டு வரவும் தங்களது தெய்வமரபினை நிலைநாட்டவும் இம்மாற்றங்களைப் புகுத்தியிருக்கலாம். இத்தகைய பண்பாட்டு ஆக்கிரம்புகளைப் பல்வாறான வழிபாடு மற்றும் பண்பாட்டு மரபுகளில் காணலாம்.

பெருந்தெய்வங்களின் பண்பாட்டு மோதல்

பொ.ஆ. 6 - 7 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் பக்தி இயக்கம் பெரும் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து பெருந்தெய்வ வழிபாடு ஏற்றத்தையும் சிறுதெய்வங்கள் இறக்கத்தையும் சந்திக்கத் தொடங்கின. "சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்" என்று அப்பரும் "பிண்டத்திரளையும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும் உண்டற்கு வேண்டி ஓடித்திரியாதே" (பெரியத் திருவாய்மொழி, 167) என்று சிறுதெய்வ வழிபாட்டினைப் புறந்தள்ளினர் சமயச் சான்றோர்கள் என்பது தெளிவாகிறது. இக்காலகட்டத்தில் மறைக்கப்பட்ட பல்வேறு மோதல்கள் நிகழ்ந்திருக்கலாம். சிறுதெய்வமாக் மக்களால் கொண்டாடப்படும் தெய்வத்திற்கு திருமால், பரசுராமர் அடங்கிய வாய்மொழிக் கதை அமைந்திருப்பது இதன் தொடர்ச்சியாகலாம்.

"மாரியம்மன் கதையில் பரசுராமருக்கும் வெட்டியானுக்கும் இடையே யுத்தம் நிகழ்வதாக இடம்பெறுகிறது. அந்நிகழ்வில் வெட்டியான் தலை பரசுராமரால் வெட்டப்பட்டு வீழ்த்தப்பட்டதாக கதை அமைகிறது" சிறு தெய்வத்திற்கும் பெருந்தெய்வத்திற்கும் இடையே உண்டான பண்பாட்டு மோதலானது குறியீட்டுத் தன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கதையில் இடம்பெறும் பரசுராமர் பெருந்தெய்வத்தின் குறியீடாகவும் வெட்டியான் சிறு தெய்வத்திற்கான குறியீடாகவும் அமைந்துள்ளது.

உயர்ந்த சமூகத்தாருக்கும் தாழ்ந்த சமூகத்தாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலானது பின்வரும் காலகட்டத்தில் சமூக மோதலாகவும் பிற்காலங்களில் வைதீக மரபிற்கும் நாட்டார் மரபிற்கும் இடையில் ஏற்பட்ட பண்பாட்டு மோதலாகவும் உருப்பெற்றது. "புராணக்கதைகள் சமயக்கொள்கைகளின் கருத்துருவங்கள். பெரும்பாலும் அவை புனிதமானவை. மேலும்; பெரும்பாலும் அவை இறையியலுடனும் சடங்குகளுடனும் தொடர்புப்படுத்தப்படுபவை. அவற்றில் வரும் இன்றியமையாத பாத்திரங்கள் மானுட உயிர்களல்லர். ஆனால் அவை பெரும்பாலும் மானுடப் பண்புகள் கொண்டவை."(லூர்து தே., 2011, ப.188) மாரியம்மன் தொன்மம் லூர்து சொல்லக்கூடியப் பண்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. மனிதப் பண்புகளைக் கொண்டிராதோரைச் சிறுதெய்வமாக வழிபடும் மரபு அரிது. தன் மக்களைக் காத்தவரையும் ஆணாதிக்க மனோநிலையில் உயிர் நீத்தோரையும் சிறு தெய்வங்களாக மக்கள் வழிபடுகின்றனர். இத்தெய்வங்கள் மக்கள் வாழ்வியலோடு நெருங்கியத் தொடர்பு கொண்டவையாக இருப்பதை அறியமுடிகிறது. பண்பாட்டு மோதலின் கூறுகளை மாரியம்மன் வழிபாட்டுத் தொன்மம் கொண்டிருப்பது புலனாகிறது.

மாரியம்மன் வழிபாட்டில் காத்தவிரியன்

மாரியம்மன் தொன்மக் கதையில் இரு காத்தவிரியன் இடம்பெறுகிறது.

ஜமத்கனி முனிவரின் காமதேனுவை அபகரித்துச் சென்ற அரசன் காத்தவிரியர்ச்சுனன் என்று புராணம் கூறுகிறது. மக்கள் கதையில் அம்மன்னனை காத்தவிரியன் என்றே குறிப்பிடுகின்றனர். வெட்டியானின் இறப்பிற்குப் பிறகு அவனே காத்தவிரியனாகி மாரியம்மன் வழிபாட்டில் முதன்மை பெறுவதாகவும் கூறப்படுகிறது. வெட்டியானை காத்தவிரியன்என்றபெயரில்வழிபடவேண்டும்என்பதற்கானகாரணம்புலப்படவில்லை. இருப்பினும் காத்தவராயன் என்ற காவல் தெய்வம் மாரியம்மனைக் காத்து நிற்பதாக பல்வேறு கதைகள் மக்களிடையேக் காணப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு கதை மாற்றத்தில் வெட்டியான் என்ற செயற்கைச் சேர்க்கை நிகழ்ந்திருக்கலாம்.

மாரியம்மனுக்கு விழா எடுப்பதற்கு முன்பு காத்தவிரியனுக்கு விழா எடுப்பது மரபாக இருந்துவருகிறது. மாரியம்மன் கோயில்களில் பல்வேறு மக்கள் வழிபட்டு வந்தாலும்காப்புக்கட்டுஉரிமைபறையர்இனமக்களுக்குஉரியதாகஉள்ளது."ஒவ்வொரு சாதியும் தமக்கான பண்பாட்டு வேர்களையும் தனித்தன்மைகளையும் பண்பாட்டு மூதாதையர்களையும் அடையாளப்படுத்துவதை நோக்கி நகர்ந்துள்ளது. அருந்ததியர் இனம் மதுரைவீரன், ஒண்டிவீரன் என்போரையும், பறையர் இனம் காத்தவராயனையும் தமது சமூக சமயக் காவலர்களாக மீட்டுருவாக்கம் செய்வதைக் காணமுடியும்." (இராமநாதன். ஆறு, நவம்பர் 2003,பக் 107) இக்கதையில் இடம்பெறக்கூடிய காத்தவராயன் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர் என்பதால் இச்சமூகத்திற்குறியோராக இருந்துள்ளதைக் கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதைப் போன்றே திருச்சிராப்பள்ளி மாவட்ட மாரியம்மன் வழிபாட்டோடு காத்தவராயன் வழிபாட்டு முறையும் தொடர்புடையதாக உள்ளது. தொன்மத்தில் ரேணுகாதேவியைக் காத்து நின்றதால் காத்தவராயன் இவ்வழிபாட்டிற்குள் வந்திருக்கக்கூடும்.

முடிவுரை

அதிகார வர்க்கத்தில் ஆள்கிற நிலையில் இருக்கின்ற சக்தி ஆளப்படுகிற மக்களிடையே பல்வேறு பண்பாட்டு மாற்றங்களையும் தாக்கங்களையும் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே இருக்கும் என்பது வரலாற்று பார்வையில் அனைவரும் அறிந்ததே. பல்வேறு இன மக்களின் படையெடுப்புகளாலும் பல்வேறு ஆட்சி முறை மாற்றங்களினாலும் மக்களினுடைய ஆதிப்பண்பாடும் பழக்க வழக்கங்களும் தொடர்ந்து மாற்றங்களுக்கு உட்பட்டு கொண்டே தான் இருக்கிறது. சில நாட்டுப்புற வழக்காறுகள் அத்தகைய பண்பாட்டு எதிர்ப்புகளைக் கடந்து இன்றளவும் தன் தூய தன்மையுடன் நிலைத்திருக்கிறது. பெரு தெய்வங்களினுடைய வளர்ச்சி காலகட்டத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் ஒடுக்குதலுக்கு ஆளாக்கப்பட்டது என்பது இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முயன்ற பெருதெய்வ வழிபாடும் ஆரியமயமாக்கலும் ஒன்றிணைந்து நாட்டுப்புற மக்களிடையே செல்வாக்கு பெற்று இருந்த தெய்வத்தை தன்னுடைய வசமாக்கிக் கொண்டு அதன் மேல்

தன் அனுபவ துணைக்கதைகளைச் சுட்டி மக்களினுடைய மனதில் பெருந்தெய்வங்களாக சிறு தெய்வங்களை மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சியாகவே புதுக்கோட்டை வட்டார மாரியம்மன் கதையில் காணலாகும் தொன்மத்தை அறிய முடிகிறது. இவ்வகையான பண்பாட்டு தாக்கங்களையும் பண்பாட்டு மாற்றங்களையும் ஆராய்கையில் மக்களுடைய மனநிலையிலும் ஆட்சி நிலையிலும் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் புலனாகிறது. ஒருவகையில் இம்மாற்றங்கள் அடிப்படை ஆதாரங்களை அழிக்கின்ற வகையில் அமைந்தாலும் இவ்வகையான பண்பாட்டு மாற்றங்களின் மூலம் மக்களினுடைய வாழ்வு வளர்ச்சி பெற்றுக் கொண்டே தான் இருந்தது என்பதை மறுக்க இயலாது. இவ்வாறான பண்பாட்டு தாக்கங்களைக் கண்டறிகின்ற பொழுது அதன் உண்மை தன்மையையும் ஆராய வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

தகவலாளர் பட்டியல்

1. குஞ்சப்ப குருக்கள், 82, பண்டாரம், படிப்பறிவில்லை
2. சுவாமிநாதர், 57, ஐயர், வேதக்கல்வி

துணைநின்ற நூல்கள்

1. இராமநாதன். ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வு நெறிமுறைகள், தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம், நவம்பர் 2003
2. சக்திவேல்.சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மாணிக்கவாசகர் பதிப்பகம், 2022
3. சதாசிவ செட்டியார், தேவாரப் பதிகங்கள், சென்னை 1925.
4. சாமி பி. எல், தமிழ் இலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிட்டெட், சென்னை,1986
5. சிவசுப்ரமணியம்.ஆ., பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிட்டெட், சென்னை,2015
6. தசரதன்.ஆ., (ப.ஆ) மாரியம்மன் கதைப்பாடல், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை, 1995
7. பெருமாள். அ.கா.,பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிட்டெட், சென்னை,2018
8. லூர்து.தே., நாட்டார் வழக்காற்றியல் - சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் - 2011
9. வானமாமலை. நா., நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிமிட்டெட், சென்னை,2007

10. ஜேஸ்பின் கலா.கு., மாரியம்மன் இடை நிலைதெய்வம், இந்திய பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, புதுடெல்லி, 1992

References

1. Ramanathan. A, Ethics of Folklore Study, Institute of Folklore of South Indian Languages, November 2003
2. Sakthivel, Folklore, Manickavasagar Publications, 2022
3. Sadasiva Chettiar, Thevarapadigal, Chennai 1925.
4. Sammy B. L. Mother Goddess Worship in Tamil Literature, New Century Book House (P) Ltd., Chennai, 1986
5. Sivasubramaniam, Cultural Identity Struggles, New Century Book House (P) Ltd., Chennai, 2015
6. Dasaratha (A. (b) Mariamman Kathipadal, Centre for Conservation of Tamil Oolai Choodis, Chennai, 1995
7. Perumal. Ancient Tamil liturgical traditions, New Century Book House (B) Ltd., Chennai, 2018
8. LURDD, National Prosecution - Some Basics, National Prosecution Research Centre - 2011
9. The sky New Century Book House (P) Ltd., Chennai, 2007
10. Jaspin Kala, Mariamman Interfaith, Indian University Tamil Teachers Association, Coimbatore, New Delhi, 1992

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

வினோதா.செ, ஜெயபால்.ப, “புதுக்கோட்டை வட்டார மாரியம்மன் வரலாற்றில் தொன்மமும் பண்பாட்டு மோதல்களும்” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 3, ஜூலை 2025, பக். 54-62

Cite this Article in English

Vinotha.S, Jayapal.P, “Deconstructing the Mythology and Cultural Dynamics of Mariamman in Pudukkottai Region” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, July 2025, pp. 54-62